உ

சிவமயம்.

கணபதி துணை.

353

# வைரவன்கோவில் ஸ்தலமான்மியம்.

இது

வைரவன் கோயிற் புராணத்தை ஆதாரமாகக்கொண்டு

பலவான்குடி

"சிவநேசன்" பத்திராதிபர்

ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்

எழுதியது

௲௯௱௩௰௨ கார்த்திகைமீ

1932

உ
சிவமயம்.
கணபதி துணை.

# வைரவன்கோவில் ஸ்தலமான்மியம்.

### விநாயகர் காப்பு.

சீர்பெற் றோங்குஞ் சிவசத்தி குஞ்சரப்
பேர்பெற் றீன்ற பெரும்பெயர்ப் பிள்ளையை
நார்பெற் றுள்ள நளினத் திருவினர்
பார்பெற் றெய்துவர் பல்வகைச்செல்வமும்.

### வளரொளிநாதர் துதி.

சீர்மலியும் பொருள்மலியுஞ் சிற்பரனுர் அருள்மலியும்
வார்மலியுந் தனத்தாயாம் வடிவுடையாள் ஒருபாகன்
கார்மலியுங் கண்டத்தெங் கண்ணுதலாம் வளரொளிப்பேர்
தார்மலியும் பரசிவன்ரு டலைமலிய வணங்கிடுவாம்.

### வடிவுடையம்பிகை.

எழுதா மரையின் மின்னுரும் எழுதா மறையு மினிதேத்தித்
தொழுதா யனந்த வுயிரகத்துந் தூய்தா யரிய மந்தணமாய்
முழுதாய் மநுவாய் மூதுலகாய் முதிருஞ் சுவைப்பாற் கரந்துறையு
மிழுதா யெவையுங் கலந்தவடி வுடையா ளிணைத்தா ளிறைஞ்சிடுவாம்.

### வைரவர்.

படைக்கும் பரிசும் படியளிக்கும் பண்பும் பதுமப் பண்ணவர்க்குந்
தொடைப்பைந் துளவத் திருமாற்குஞ் சுதந்த ரத்த தொழிலன்மை
முடைப்புன் றலைவெண் கலன்கரிய முழுக்கஞ் சுகமென் றிவ்வுணர்த்த
மடைத்தண் புனல்போல் அருள்வழங்கும் வடுக நாதன் வழித்துணையே.

### சுப்பிரமணியர்துதி.

புள்ளிப் பிணைமே ஞட்டயந்த பொன்னங் கொம்ப ரன்னுளை
வள்ளிப் பொருப்பில் வாழ்மயிலை வடிவு முதிர்ந்த கௌமாரந்
தள்ளிக் கிழமா தவனுகித் தனித்துப் புணர்ந்த இளஞ்சேயின்
கள்ளிற் பொலியுங் கடிகமழ்பூங் கமல மலர்த்தாள் கைதொழுவாம்.

### திருநந்திதேவர்.

அறிவருங் காமி காதியா கமப்பே ரார்கலிக் களவுகோ லாகிச்
செறிவினுற் பவஞ்ச முழுவதுஞ் சுத்த சிவபரஞ் சுடரெனத் தெளிந்து
நெறிகெழு சனற்கு மாரனுக் குண்மை நிலையினை மலைவற நிகழ்த்திப்
பிறிவிலனின்ப வெள்ளத் தூட்டிளைக்கும் பெருந்தகை நந்திதாள்பெட்பாம்.

## நாட்டுவளம்.

அகர வுயிர்போல் வேற்றுமையற் றுவி தோறுங் கலந்தியக்கி
நிகரி லிறைவன் வழுதியென நீதி புரிந்த வியற்றுகிப் [ழ்ச்சைவ
புகரி னெருவிப் பொலிந்தினிமைப் பொருள்சேர் தமிழ்த்தாய்ப் புக
நகர நிரம்பு தென்பாண்டி நாட்டு வளத்தை நாட்டுவமால்.

அகர வுயிர்போல் அறிவாகி உயிர்தொறும் ஒளிரும் ஒருதனி முதல்வனே, சோமசுந்தர பாண்டியனுகிச் செங்கோல் செலுத்திய திருநாடாய், அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்குத் தாய்நாடாய், சைவந் தழைத்தோங்கும் தவநாடாய், தவத்தினிற் கதித்த அகத்திய முனிவர் வதியுஞ் சந்தனப் பொதியத் தடவரையும், அதினின்றெழுகிப் பெருகியோடும் தாமிரபருணிப் பெருந்தியும் தன்னகத் துக்கொண்டுள்ள நீர்வள நிலவள நிறைநாடாய், துவாதசாந்தப் பெருவெளியாகிய மதுரைமுதலியதிருத்தலங்கள் மலிநாடாய், வேதங்கள் புகழும் வெள்ளிமலைமேல் விளங்கும் வளரொளிநாதர் வடிவுடையம்மை சமேதராய்த் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் வயிரவமாநகரத்தையும், அப் பெருமான் விருப்புடன் வதியும் பிற பல ஸ்தலங்களிலுள்ள திருக்கோயில்களையும் பொன்னும் மணியும் இழைத் துப்பு துக்கித் திருப்பணி செய்யும் மகுட தனவைசியர்கள், சாதி சமய ஆச்சிரம தருமங்களில் வழுவின்றிப் பூதி மணி ஐந்தெழுத்தாகிய சிவசாதனங்களைப் பூடணமாகப்பூண்டு பெருநிதிக்கிழவர்களாய்ப் புகழுடன்வாழும் நகரங்கள் பலவுங்கொண்ட நன்னடாய் விளங்குவது,மங்கலப்பாண்டிவளநாடாகும்.

## நகரவளம்.

மாலவ னுந்தி யென்னு மலர்த்திசைப் பிறந்தான் மேனள்
வாலறி வுடைய நெஞ்சால் வகுத்தவிவ் வண்டந் தன்னுட்
பாலமை தெய்வத் தச்சர் படைத்துள பதிகட் கெல்லாம்
மூலமாம் வயிர வப்பேர் முழுமுத னகர மாதோ.

நலமிக மலிந்த இப்பாண்டி நாட்டிலே, கிழக்கே திருப்பெருந் துறையும்,தெற்கே திருக்கானப்பேரும், மேற்கே திருக்கொடுங்குன்றமும்,வடக்கே வெள்ளாறும் ஆகிய நான்கையும் எல்லையாகக் கொண்டு, வானளாவிய மதில்களும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும், மறையவர் முதலிய நால்வருணத்தார் வீதிகளும், ஆதுலர் சாலை சோலையாதிய அறநிலயங்களும் உடையதாய், நன்மக்கட்பேறு, கல்வி, செல்வம், வலிமை, வென்றி முதலிய நலங்கள் பலவும் தன்னை அடைந்தோர்க் களிக்கும் அற்புத மிக்கதாய், 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம்' என்னும் வழக்காற்றிற் கிசைய, தன்கண் உள்ள உறுப்புக்களின் சிறப்பியல்களை நோக்கியே ஆன்றோர் சிற்பநூலை யியற்றினர்கொலோ என் எண்ணுமாறியன்ற பன்னருஞ் சிறப்பும், தனவணிகப் பெருமக்களது ஒன்பது நகரக் கோயில்களில், எழகப்பெருந் திருவான நகரத்தார்கட்கு வழிவழி யுரிமையும் உள்ள வடிவுடையம்மை சமேத வளரொளிநாதர் திருக்கோயிலையுடையதாய்விளங்குவது வைரவமாநகரம் என்னும் வளங்கெழு பதியாகும்.

## புராண வரலாறு.

பூர்வ காலத்திலே, தபோதனர்களின் வேண்டுகோட் கிரங்கிய சதுர் முகக் கடவுள் சக்கரவடிவாயாக்கிய தருப்பைப் புல்லால் தவஞ்செய்தற்குச் சிறந்த தானம் என வகுக்கப்பெற்ற நைமிசாரணியத்திலே, வேதவியாச மகரிஷியினிடத்துப் பதினெண் புராணங்களையும் முறையாகக் கேட்டுத் தெளிந்த சூதபுராணிகரை முனிவர்பெருமக்கள் பக்தியுடன் பணிந்து போற்றி, "புராணமணிகள் நிறைந்த பொக்கிஷமே! முதல் நடு வீறில்லா முழுமுதலின் சரிதங்கள் பல பொதுவாகத் தேவரீர் சொல்லக்கேட்டுச் சிந்தை தெளிந்தோம்; இனி, எக்காலத்தும் அழிவில்லாத மூர்த்தி தலந் தீர்த்தம் ஆகிய மூவகையானுஞ் சிறப்புற்றோங்கும் திருத்தல சரிதமொன்று சொல்லியருள்வீராக!" என்று கேட்கச் சூதமுனிவர், சிவபிரான் திருவடியையும் தமது குருவடியையும் சிந்தித்து வந்தித்துச் சொல்லுவராயினர்:—

கேளீர், முனிவர்களே! "பண்டைக்காலத்தில், வசிட்டர் பராசரர் வியாசர் சுகர் வான்மீகர் காசிபர் வாமதேவர் சனகர் கௌசிகர் பாரத்துவாசர் சனற்குமாரர் முதலான முனிபுங்கவர்கள் ஸ்ரீகாசியில் கங்கை நீராடி விசுவேசரைத்தொழுது முத்திமண்டபத்தில் வீற்றிருந்தகாலை, விந்தமலையின் செருக்கையடக்கி எழுகடனீரையும் உழுந்தளவாக்கொண்டு உண்டருளிய அகத்தியமுனிவர் கங்கையில் மணிகன்னிகைத்துறையில் நீராடி அகிலேசரை அன்புடன் பூசித்து ஆங்கணைந்தனர். 'முனிவர் குழாங்கள் அகத்தியரை, "அறுமுகக்கடவுண்மாட்டு அருணூல்கள் பலவும் ஓதியுணர்ந்த பரமாசாரியமூர்த்தியே!" எனப் பராவிப் பணிந்து,

மூலமாய்ச் சுயம்பு லிங்க மூர்த்தியும் பெற்றுத் தீர்த்த
மேலன கெழீஇய தாகி மேதினி விசும்பு வாழ்வுஞ்
சாலவின் புறுத்து வீடுந் தருவதா யொப்பின் றோங்குஞ்
சீலமார் தானந் தேர்ந்து செப்புகென் றிரந்து நின்றார்.

அவ்வா றிரந்து கேட்ட முனிவர்களுக்கு அகத்தியர், வீரபாண்டியபுரம் என்னும் வயிரவமாநகர்த் திருத்தலத்தின் சிறப்பையும், ஆங்குள்ள வைரவ தீர்த்தத்தின் மாட்சியையும், வளரொளிநாதர்-வடிவுடையம்மை—வயிரவக் கடவுள் ஆகிய மூர்த்திகளின் சீர்த்தியையும் விரித்து விளக்கியருளினர். அவரருளியவாறே, சிவ மகா புராணங்கள் பத்தினுட் பிரமாண்ட புராணத்திலுள்ள இவ் வயிரவபுரி மான்மியத்தை யான் உங்கட்குச் சொல்லுகிறேன்." என்று சூதபுராணிகர் நைமிசாரணிய முனிவர்கட்குச் சொல்லத் தொடங்கினர்.

---

## தலவிசேடம்.

வயிரவ நகரந் தன்னை மனக்கொள்வோன் தருமஞ் சாரும்
வயிரவ நகர மென்று வழுத்தினோ னருத்த மெய்தும்
வயிரவ நகரங் கண்டு வணங்கினோ னின்பந் துன்றும்
வயிரவ நகரி லென்றும் வதிந்தவன் வீடு மேவும்.

உலகிலுள்ள ஸ்தலங்களெல்லாவற்றையும் பொதுவிற் காக்கின்ற காரணத்தால், க்ஷேத்திரபாலன் என்னுந் திருப்பெயர் பெற்ற வயிரவக் கடவுள், சிறப்பாகத் தனது பெயர்கொண்டு விளங்கும் இத்தலத்தில் இனிதெழுந்தருளிப் புரக்கின்றார் என்றால், இத்தலத்தின் மகிமாதிசயங்கள் எண்ணுதற் கெளிதாமோ? இந்திரன் முதலிய இமையவர் பதவிகளைத் தன்கண் வசிப்போர்க்கு இத்திருத்தலம் எளிதிற் பயப்பதாகும். கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக் கிழமைகளில் அவ்வூரில் ஒரு நாழிகையேனும் தங்குபவர்களின் பாவங்கள் பலவும் நீங்கும். மக்கட்பேறாதிய இகபோகங்கள் பெறவேண்டினோர், பவபந்தம் ஒழிய வேண்டினோர், பரகதி யடைய வேண்டினோர், மனோலயம் பெற வேண்டினோர், சிவபரம் பொருளின் றிருவருள் வேண்டினோர் இத்தலத்தில் ஒரு கணப்போதேனும் உள்ளன்புடன் உறைவரேல், வேண்டிய வேண்டியாங் கெய்தப் பெறுவர். மரவுரி தரித்துக் காட்டிலும் மலையிலுங் கடுந்தவ மியற்றினோர், அளவில் தீர்த்தம் அன்புட னாடினோர், அன்ன தானம் சொர்ன தானம் முதலிய பல வகைத் தான தருமங்களைப் பாத்திரமறிந்து செய்தோர் பெறும் பேறுகள் அனைத்தும், ஒருநாள் இத்திருத்தலத்தில் வசித்தலால் உண்டாகும் என்பர். இறக்க முத்திதரும் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் மரித்தோரைக் காலவைரவக்கடவுள் தமது சூலாயுதத்திற் கோத்து ஒருமுகூர்த்த நேரம் முறைசெய்து பின்பு அவர்களின் பவத்தை யொழிப்பர் என்பர். இத்திருத்தலத்தில் இறந்தாரை, வைரவக் கடவுள் யாதொரு துன்புமின்றிக் கயிலாயத்திற் சேர்த்தருளுவராவார்.

இறைவன் வயிரவமூர்த்தங்கொண்டு மாதமிட்டிரன், மணி மல்லன் ஆதியசுரர்களை அழித்துத் தேவர்முதல் யாவரையுங் காத்தற்கிடனாய் விளங்கினமையின் **வயிரவபுரம்** எனவும், இன்னகாலத்தில் இஃதுண்டானதென அறியப்படாமையின் **புராதனவனம்** எனவும், ஏற்றிஞ்சிற் காடடர்ந்திருந்தமையின் **அங்கோலகானம்**(அழிஞ்சில்வனம்) எனவும் பல திருப்பெயர்களை இத்திருத்தலம் பெற்றுவிளங்கும்.

## தீர்த்தவிசேடம்.

இத்தெண் டீர்த்தம் யாந்தராலா னென நு பேரி னிலங்கிடுக
ஒத்த காத லுடையரர் யொருமண் டலமிந் நீர்மூழ்கும்
வித்த கத்தோர் பெறலரிய மிக்கமக்கள் பெறீஇ வாழ்ந்து
புத்தென் றே நுங் கொடுநிரயம் புகாமே மேலை யுலகுறுவார்.

இத் தலத்தில் வயிரவக் கடவுள் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்குத் தென் றிசையில், அப் பெருமான் தனது மூத்தலைச் சூலத்தை நிலத்தில் ஊன்ற, அதினின்றும் அவரது கருணைவெள்ளம்போலும் நீர் பெருகி நிறைந்தமையால் அதற்கு வயிரவ தீர்த்தம், காபாலி தீர்த்தம் என்னும் பெயர் உண்டாயிற்று. இத் திவ்ய தீர்த்தத்தில் ஒரு மண்டலம் விதிப்படி மூழ்கும் உத்தமர், நன்மக்கட்பேறு பெற்று நற்கதி யுறுவர். குன்ம நோயுடையோர், கோல்கோடி குடிகெடுத்த மன்னர், கணவர் மொழி திறம்பிய காரிகையார், சிவாபராதிகள், பெண்கள் கற்பழித்த பேதையர், அந்தணர்க் கிடரிழைத்த அதிபாதகர் ஆகியோர் இத் தீர்த்தத்தில் நியமமாக மூழ்கின் தங்கள் தங்கள் பவந்தீர்ந்து புனிதராவார்கள். மலடு நீங்க, மரணமும் பிறவியும் ஒழிய, செல்வம் பெருக, பகையை வெல்ல, உலகெலாம் ஒருகுடைநீழலில் ஆள, சொர்க்கம் புக வேண்டினோர்கள்; இத் தீர்த்தத்தில் விதிப்படி ஆடின், அவரவர் விரும்பியவாறே யெய்தப் பெறுவர்.

தைப்பூசத்திலும், மாசி மகத்திலும், பங்குனியுத்திரத்திலும், சித்திரை மாசத்துச் சித்திரை நாளிலும், வைகாசி விசாகத்திலும், ஆனி உத்திரத்திலும், ஆடி அமாவாசையிலும், ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியிலும், புரட்டாதி மகாநவமியிலும், ஐப்பசி முப்பது நாளிலும், கார்த்திகைமாதத்து ஞாயிறு திங்கட் கிழமைகளிலும், மார்கழித் திருவாதிரையிலும் இவ் வடுக தீர்த்தத்தில் அன்புடன் நீராடுவோர் இம்மை மறுமை யின்பங்களெல்லாமுற்று, இறுதியில் பேரின்பமும் எய்தப் பெறுவர்.

---

## மூர்த்திவிசேடம்.

உத்தம சுயம்புக் கெல்லாம் உத்தம மாகி நாத
தத்துவா தீத மாகித் தற்பர வடிவ மாகிச்
சத்திய ஞான னந்தத் தனிப்பொரு ளாகி யோங்கும்
மத்தியாந் தாதி தேற்றா வளரொளி யிலிங்க மாதோ.

முன்னொரு கற்ப காலத்தில், நான்முகன் திருமால் இந்திரன் ஆதிய தேவர்கள், உயிர்க் குயிராய் விளங்கும் சிவபெருமானே பரம்பொருளெனத் தேறாது மயங்கித் தாமே பிரமம் எனத் தருக்குற்று, வேதநெறி கடந்து

மெய்யறி விழந்து வெகுளி கொண்டு போரியற்ற முனைந்தனர். அப்போது கருணைக் கடலாகிய சிவபெருமான், அண்டங்க ளெல்லாவற்றினும் அமைந்துள ஒளிகளெல்லாம் திரண்டெழுந்தாற் போலும் ஒரு இலிங்க வடிவமாய் இத்தலத்திலுள்ள அழிஞ்சில் மரத்தடியில் முளைத்தனர். அதுகண்டு தேவர்கள் துணுக்குற்று நிற்க, "ஓ! தேவர்களே! அண்டங்கள் எல்லாவற்றையும் தமது சங்கற்பத்தாற் றோன்றச் செய்து, அவற்றின் அகத்தும் புறத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் நின்மலனும், சமயாதீதப் பழம்பொருளும், எண்குணத்தீசனும், "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க், கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி..." நிற்கும் மகாதேவனும், சொல்லானும் மனத்தானும் தொடர்வரிய சூக்குமமாய்-எல்லாமாய்-அல்லவுமாய் இருக்கும் இறைவனும் ஆகிய சச்சிதானந்தப் பேரொளிப் பிழம்பே, இங்கு வளரொளி யிலிங்கம் ஆயிற்றெனக் கடைப்பிடித் தொழுகுங்கள்." என்று ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதனைக் கேட்ட திருமாலாதிய தேவர்கள், நடுக்குற்றுத் தெளிந்து தலையன்புடையராய்,

சொற்பதங் கடந்த ஞான சொருபமே யெளிய ரேஞ்செய்
முற்பவந் தபமு ளைத்த முதுவள ரொளியே மிக்க
அற்புத மெவற்றி னுக்கும் அற்புத மாகி யுள்ளாய்
பொற்புறு புராத னக்கான் புரந்தருள் புனித போற்றி!

எனப் பலவாறு துதிக்கக் கேட்ட வளரொளிநாதர், அவ்விலிங்கத்தினின்றும் வடிவுடை யம்மையுடன் விடைமேற் றோன்றி, "தேவர்களே! உங்கள் துதிகட்கு உளம் பூத்தோம்; இனி யொருகால் உங்கள் இடுக்கண் களைய இத்தலத்து மார்த்தாண்ட வயிரவ மூர்த்தங் கொள்வோம்; நீங்கள் அகந்தை யொழித்து, இவ்வழிஞ்சிற்கானில் வடிவுடைநாயகியோடு நம்மை வழிபட்டுய்யுங்கள்." என அருளிச்செய்து, அவ்விலிங்கத் துட் புக்கனர். அவ்வருண்மொழி கேட்ட அமரர்கள், எம்பெருமானது கருணைத் திறத்தைப் பரவித் துதித்து, அவ்வாறே வேதாகம விதிப்படி பூசித்துத் தாங்கள் கொண்ட செருக்காற் றொடர்ந்த சிவத் துரோகத்தி னீங்கி, தங்கள் தங்கள் பதவிகளை யடைந்து இன்புற் றிருந்தார்கள்.

இத்தகு மகிமைவாய்ந்த இவ் வளரொளிநாதரை அன்புடன் பூசிக்க, அநேக பிறவிகளிற் செய்த தீவினைகள் பலவும் தீர்ந்து ஒழியும். உத்தராயண புண்ணியகாலத் தொடக்கமாகிய மகரமாதத்துப் பூசநாட் பூரணையில், வடிவுடையாளை வரமத்துக்கொண்ட வளரொளிநாதருக்கு, ஆதிசைவப் பிராமணரைக்கொண்டு அருச்சனையாதி புரிந்து பூசிக்கும் அன்பர்கள் இம்மை நலனெல்லாம் நிறையப்பெற்று, செம்மை நலமாகிய சிவபதமும் சேர்

வர். ஆசௌசத்தாலும் சாதி யிழிவாலும் இவ் வளரொளியைப் பூசிக்க இசையா மாந்தர்களும், அப் பெருமானது திருக்கோயிலின் கோபுரத்தைத் தொழுவரேல், அவர்களது வினைகளொழிந்து வீடுபெறுவர். இவ் வளரொளிநாதர் ஆலயத்தில் தூப தீபமாதிப திருப்பணிகள் செய்யும் அன்பர்கள்,வேதவிதிப்படி தானம்தருமம் யாகம் ஜெபம் தபம் முதலியசெய்வோரடையும் பதவிகளினும் மேலாம் பதவிகளில் வாழ்வார்களென்றால், இத் தலத்திற் பெருந் திருப்பணிகள் செய்வோர் பெறும் பேறு பேசுதற் கெளிதாமோ?

---

## தேவர் சரண்புகல்.

திங்களும் அரவும் கங்கையும் கொன்றைப்பூ மாலையும் தங்கிய சடையுடைப் பெருமான் றிருவருள் பெற்ற காசிப முனிவர், மிகப் பேரழகினையுடைய மாயையைக்கூடிப் பெற்ற புதல்வர்களாகிய சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூவரும், எண்ணில்லா அண்டங்களில்உள்ளோர் செய்த பெரும் பாவங்களெல்லாம், மூன்று பேருரு அடைந்தாற்போன்று இருந்தனர். அறநெறித் தந்தையாகிய முனிவரின் சிவநெறித் திறனை விடுத்து, மறநெறித் தாயாகிய மாயையின் தீய வாசகத்தின் வழியே தீநெறிக்கட் சென்று மதோன்மத்தர்களாய், அண்டங்கள் முழுதும் ஆளவும், அமரர்களை யேவல்கொள்ளவும் அவாவினர். அவ் வாசை நிறைவேறுதற்கு எவராலும் ஆற்றுதற்கரிய ஓர் வீரமாமகம் புரிந்து, தேவதேவனாகிய உமாபதியைத் திருப்தி செய்ப, வேள்விச்சாலை நிறுவி, போக பூமி முழுதும் பெரிய ஓமகுண்டமாக்கிச் செந்தீ வளர்த்து, ஒரு பதினாயிரம் ஆண்டுகள் ஊணுறக்கமின்றி நோற்றும் வெண்ணீறணி மேனியன் வெளிப்படாமையினால், சூரபதுமன் ஓமகுண்டத்தில் வீழ்ந்து உடலைத் தீக்கிரையாக்கினான். தம்பிகள் இருவரும் யாகத்தை நடத்தியும் எம்பிரான் வெளிப்படாமையால் தாங்களும் அவ் வெரியின் மூழ்கி யுயிர் துறப்பத் துணிந்தனர். அரவ கங்கணதரனாகிய பரமன் ஒரு பிராமண வடிவங்கொண்டு விரைவின் எழுந்தருளி, அவ் விருவரையும் தீயில் விழாது தடுத்து, வேண்டுவது யாதென வினவ, சூரனுக்கிளைய இருவரும் தம் முன்னோனை உயிர்ப்பித்துத் தரும்படி வேண்ட அங்ஙனமே பரமன் திருவருள் சுரக்க, சூரபத்மன் ஓமகுண்டத்தினின்றும் உருப்பெற்றெழுந்தான். எழுந்த சூரனொடு தம்பியர் இருவரும் அளவளாவிக் களித்தனர். வித்

தகத்திரு வேதிய வேடராய் வந்த அத்தன், அம்மை அப்பராய் இடபாரூடராய், சூரபத்மனை நோக்கி, 'உன் திறமைக்கு மகிழ்ந் தோம். நீ விரும்பிய வரம் யாது?' என்றலும், சூரபத்மன், "அண்ணலே! நான் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆட்சி புரியவும், பிரமேந்திராதி தேவர்களெல்லாம் எனக்கு இராப்பகலாக ஏவல் செய்யவும், நினைத்த இடமெல்லாம் சென்று வரத்தக்க தேரும், அழியாத ஆயுளும், போர்க்களத்து விடுப்பின் தப்பாது மாற்றலர் உயிர்களைக் கவரும் கூர்மையான ஆயுதங்களும், அழியாத வச்சிரயாக் கையும் தேவரீரிடத்துப் பேரன்பும் திருவருள்புரிய வேண்டுமென்று இரப்ப, அவ்வாறே வரமருளி, அவனுக்கிளைய இருவர் விரும்பிய வரங்களையும் கிருபையுடன் அருளித் திருக்கைலை சேர்ந்தனர்.

வரம் பெற்ற மூவரும் பெரு மகிழ்வுடன் ஆர்வாரித்துத் தமது சேனைகள் சூழக் குலகுருவாகிய சுக்கிராசாரியர்பா லணுகி, அவரது கட்டளையை மேற்கொண்டு, திக்குவிஜயஞ் செய்து, அரி பிரமேந்தி ராதி தேவர்களையெல்லாம் ஜெயித்து, அமராபதியும் அளகாபுரியும் வைகுண்டமும் பின்னிடத்தக்க ஓர்சிறந்த பட்டணத்தைத்தெய்வத் தச்சனால் பேரெழிலும் நிறைவளமும் பொருந்த தென் சமுத்திர மத்தியில் நிர்மாணித்து, வீரமாமகேந்திரபுரம் என்னும் அந் நகரில் சூரபத்மனவன் தன் தம்பியர்களும் மந்திரி பிரதானிகளும் சேனைத் தலைவர்களும் புடைசூழ அரசுபுரிந்து வருங்கால், அவுண மகளிர் சிலர் சூரபத்மனிடம் இந்திராணியின் பேரழகை வருணித் துக் கூற, அவன் காமவேட்கை மிக்குடையனாய் இந்திராணியைத் தனக்கு உரியளாக்கக் கருதி, இந்திரனையும் இந்திராணியையும் கொண்டுவரும்படி தன் படைத் தலைவர்களாகிய கும்பாண்டகன், தேவகண்டகன், வக்கிரதமிட்டிரன், மாதமிட்டிரன், மணிமல்ல ராதியருக் காஞ்ஞாபிக்கப், பத்துத் திசைகளினின்றும் வந்த படைகளுடன் அவர்களும் அத் தம்பதிகளைச் சுவர்க்க மத்திய பா தாளமெங்கணுந் தேடுவாராயினர். இஃதறிந்த இந்திரனும் இந்திரா ணியும் சில தேவர்களும், அவுணர்களின் கொடுமைக்கு அஞ்சி, பூவுல கிற் சீகாழியென்னுந் திருத்தலத்தைச் சேர்ந்து, திருநந்தனவன மியற்றிப் பரம்பொருளைப் பராவியிருக்கும் நாளில் நாரத முனிவர் ஆங்குவந்து இந்திரனாதியரை ஆசீர்வதித்து, "ஓ! இந்திரனே! நான் பூவலம் வரும்பொழுது, உயிர்க்குயிராய் விளங்கும் சிவப்பரம்பொரு ளுக்கு உறைவிடமாய், துவாதசாந்தப் பெருவெளியாய் உள்ள மது

ரையம்பதிமுதலான திருத்தலங்கள் பலவும், பொருநைநதிமுதலான பல நதிகளும் தன்னுட்கொண்டு, சைவப் பயிர் - தமிழ்ப்பயிர் செந்நெற் பயிராதிய தழைத்துப் பல நலங்களும் பயக்கும் பான்மையதாய் உள்ள தென்னாட்டிலே, புராதனவனம் என்னும் ஓர் அழிஞ்சில் ஆரணியத்தைக் கண்டேன். மகா மகிமை தங்கிய அவ்விடத்து அடியவர் இடரகற்றும் கருணாநிதி வடிவுடையம்மை சமேத வளரொளி நாதராய் எழுந்தருளியிருக்கின்றார். நீவிர் ஆங்கணேந்து அவ் வம்மை யப்பரைச் சரணடைந்தால், துயர்தீர்ந்து, நன்னிலையுறுவீரென நவின்றனர். இவ் வின்னுரை கேட்ட இந்திரன் மன்னு பேருவகையுடன் தன் குலகுருவாகிய வியாழ பகவானிடத்து விண்ணப்பித்து, அவரையும் மற்றைத் தேவர்களையும் உடன்கொண்டு பெருமையிற் சிறந்த புராதன வனத்தைச் சேர்ந்து, வடிவுடையம்மை சமேத வளரொளிநாதர் திருவடிகளில் வீழ்ந் திறைஞ்சி, தங்கள் குறைகளைத் தவிர்த் தருளும்படி முறையிட்டுப் பிரார்த்திக்க, வளரொளிவள்ளல் அமரர்கட்கு அஞ்சலளித்து, "உங்கள் துன்பம் இன்றே ஒழிந்தது; உங்கட்குக் கேடுசூழும் மிகக் கொடியோராகிய மணி மல்லாசுரர் ஆதியரை ஒழிக்க நாமே வயிரவ மூர்த்தமாக வருவோம்; கவலை ஒழிக!" எனத் திருவருள் பாலித்தனர்.

---

## வைரவர் திருவவதாரம்.

இஃதிங்ஙனமாக: மணி மல்ல னாதிய அசுர கூட்டங்கள் இந்திரனாதியோரை மூவுலகினுந் தேடிக்காணாது வருந்தி நாரதரின் சூழ்ச்சியால் அறிந்து ஊழ்வலி பிடர்பிடித்துந்த புராதனவன க்ஷேத்திரத்தைக் குறுகி ஆர்த்தனர். அவுணர் கூட்டங்கள் சமீபித்து ஆரவாரித்தலை அறிந்த தேவர்கள், சிம்ம கர்ச்சனையைக் கேட்ட மத்த யானையைப்போல் மயங்கித் தியங்கி மிக விரைந்தோடி அத்தனார் உறையும் ஆலயத்துட் புகுந்து, சிவபரஞ்சுடரைச் செவ்வே போற்றி முறையிட, வளரொளிப் பெருமான் அவர்தங் குறைதவிர்ப்பான் திருவுளமிசைந்து,

மதிவகிர் செருகி யாங்கு வக்கிர தந்த மின்ன
முதிர்சினம் புறத்துப் பொங்கி மொய்த்தென முறுவல் தோன்ற
விதிர்விதிர்ப் புறக்கு மும்மை விழிகளிற் புலிங்கஞ் சிந்த
கொதியழல் வடவைத் தீயிற் கொழுந் துவிட் டெரிய வேணி;

கிளர்முடி யண்ட கோளங் கெழுமநாற் புயமு மெண்டிக்
களவினைக் காட்ட மேனி யனந்த சூரியரிற் சீர்ப்பத்
தளர்வுறு சுரர்பால் வைத்த தண்ணிய கருணை யாலே
வளரொளி நாமத் தீசன் வைரவக் கோலங் கொண்டான்,

என்றபடி வயிரவத் திருக்கோலங் கொண்டருளினர்.

இத் திருக்கோலத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள், திருச் சேறைத் திருப்பதிகத்தில்,

திருச்சிற்றம்பலம்.

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால வைரவ னாகி வேழம்
உரித்துமை யஞ்சக் கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

திருச்சிற்றம்பலம்.

எனச் சிறப்பித்துள்ளார்.

உலகெலாமாகி வேறாயுடனுமாய் ஒருவராலும் அளவிட்டறிய வொண்ணாது உயிர்தொறும் ஒளித்த ஒருவன், கலகம் விளைக்கும் அவுணர் குழாங்களை அழித்தொழிக்கப் பூவுலகத்தின்கண்ணே வடுக வேடந்தாங்கிவர, தமது வியர்வையினின்றும் தோன்றிய பூத வெள்ளங்கள் முத்தலைச் சூலம் சக்கரம் இருப்புலக்கை வாள் கோடரி ஈட்டி தண்டம் வளைதடி அம்பு குந்தம் வேல் முதலாகிய படைக்கலங்களைத் தடக்கைகளிற் றாங்கி, இரணபேரி ஜய பேரிகை கள் முழக்கித் தம்மைச் சூழ்ந்தனர். ஐயன் தம் படைகளுக்கு ஓர் சேனைத்தலைவன் வேண்டு மென நந்தி தேவரைத் திருவுளத் தெண்ணினர். நந்திதேவர் வந்து பணிந்து, இறைவன் பணியை யுவந்து, அடியனேன் சேனாதிபதியாக அமர்ந்த போதிலும், போர்த்திறன் வாய்ந்த ஒருபெருந்தலைவர் வேண்டும். அதற்குத் தகுதி யுடையவர், உலகத்திலுள்ள இடையூறுகளை யெல்லாம் தவிர்த்தருள்கின்றவரும், இமவான் பயந்த மரகதக்கொடி பிடியுரு வாகிப் பெற்ற ஆனைமாமுகத்து அண்ணலும் ஆவர். திக்கெலாம் புகழும் அந்தத் தெய்வநாயகனைப் பின்பற்றிச் சென்று, பெருந்திர ளான அவுணர்களை யெல்லாம் ஒழித்து, உனது திருவடியைப் பற்றி நிற்கின்ற தேவர்களின் பதவிகளை நிலைநிறுத்தித் தேவரீரிடத்து வந்து சேரும்படி எளியனேற் கருளு கென்றலும், அவ்வாறே

யாருக! என அருள்சுரந்து மகிழ்சிறந்து திருவுளம் பற்றலும், ஐங்கரத் தண்ணல் வந்துற்றனர். அவரைப் பார்த்துத் துஷ்டர்களாகிய அவுணர்களைக் கொலைத்து,நமை அடைந்த சிஷ்டர்களின் துயர் தீர்க்க முன்னிற்பாயென் றருள, யானைமாமுகத் தண்ணலுளமகிழ்ந்தோ மென்றலும் வைரவக் கடவுள் விடையளித் தமர்ந்தனர்.

நமது வைரவக் கடவுளின் தெய்வீகப் படையெழுந்து விரிந்த கடலெனப் பரந்தது; விண்ணவர் போற்றினர்; அனந்தம் பூத வீரர்கள் வந்து கலந்து போற்றிசைத்தனர். பன்மணிக ளிழைத்துத் திருப்பணி யாற்றிய திருக்கோயின் முகப்பில் தங்கியிருந்த, முக்கண்மூர்த்தியாகிய விநாயகக் கடவுள் நந்திதேவரைப் பார்த்து, கடல் புரண்டன்ன நம் பக்கலில் நிற்கும் நம் கணங்கட்கெல்லாம் நீ பெருந்தலைமை பூண்டு முன்னணியிற் செல்க எனக் கட்டளையிட்டருள, திருவாணையைச் சிரமேற்கொண்டு திரு நந்திதேவரானவர் யானை தேர் குதிரை பதாதி யாகிய நால்வகைப் படைகளும் புடைசூழப் புறப்பட்டனர். தண்டம் உடைவாள் கேடகம் சக்கரம் சூலம் வேல் வில் அம்பு முதலிய படைக் கலங்களைந்திப் பெருமுழக்குடன் நந்திக் கடவுளின் சைந்நியங்கள் முந்திச் சென்றன. பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுள் வெற்றிமிக்க பூதவீரரைப் பார்த்துத் தமது படைகள் முற்றும் படர்ந்தெழப் பணித்து, வேத வாம்புரிகள் பூண்ட இரதத்தின்மீது ஆரோகணித்தனர். கின்னரர் வீணை வாசிக்க, இரணபேரிகை முழக்கமானது எண்டிசைக் களிறுகளின் செவிகளைச் செவிடுபடுத்தின. இந்திரன் முதலான தேவர்கள், அடியோங்கள் செய்யும் பணியாது? என, அடிபணிந்து வேண்டினர். ஆலகாலன், காலவேகன், அக்கினிப்பிரளயன், கும்பன், விபாண்டகன், தண்டி, சாம்பன், சக்கிரன், கதாதரன் முதலான எண்ணிறந்த படைத் தலைவர்கள், பற்பல விதங்களான படைக்கலங்கள் தாங்கி வரையெனப் படர்ந்து தொடர்ந்தனர். அளவில்லாத பூத வெள்ளங்களும் இந்திராதி தேவர்களும், விண்ணும் மண்ணும் நிறைந்து கூட்டமாகத் தொடர, ஆனைமுகக் கடவுள் நந்தியந் தேவரின் தூசிப் படையுடன் சேர்ந்ததும், வீரர்களின் ஆர்ப்பின் ஒலியானது சென்று அவுணர் சேனைகளுக்கு அறிவித்தது.

---

## க. சாரத வீரர்களுக்கும் தானவ வீரர்களுக்கும் யுத்தம்.

மூவ ருக்கு முதல்வ னாய முக்க ணெந்தை வளரொளித்
தேவ தேவன் முன்பு தந்த செல்வ னும்வி நாயகன்
காவல் கொண்ட தானை யோடு கடித மர்க்கு வருதிற
மோவி லாற்ற லவுண ருக்கு ரைத்த லுங்கும் பாண்டகன்.

மூவர் முதல்வனாய், தேவதேவனாய், முக்கண்ணப்பராய் விளங்கும் வளரொளிப்பெருமானின் மூத்த பிள்ளையாராகிய விநாயகப்பெருமான் தனது ஆணைவழிச் செல்லும் தானைகளோடு விரைந்து பொருதற்குவருந் திறத்தை யுணர்ந்த அவுணப் படைகளில், கும்பாண்டகன் என்பவன் ஆலகாலவிஷம்போலச் சீறி விருதுகூறி யாரவாரித்தனன். கோடை யிடிபோல் உறுமி யார்த்து சக்கரம் இருப்புலக்கை யாதியகொண்டு அவுணசேனைகள் அமர்புரிந்தன. கருநிறத் தவுணர் கரத்தில் வாளேந்திப் பூதப் படைகள் சிதறும்படி வாட்டக்கண்ட பிரளயன் என்னும் பூதவீரன் அவுணர்தானையை அதமாக்குவேன் என வீரங்கொண்டு, அவுணரை அறைகூவி அழைத்துப் பெரிய வில்லை வளைத்து, நாணேற்றி, நாணோசையால் கோர ரூபிகளான தானவ சேனைகள் பின்னிடையும்படி யானைக் கூட்டத்திற்புகுந்த சிங்கத்தைப் போலவந் தெதிர்த்தனன். தேவகண்டகனென்னும் பாதகனாகிய அவுணப் படை வீரன் பிரளயனுடைய உருவந் தெரியாமல் ஆயிரக்கணக்கான சரோருகங்களை வரிசை வரிசையாகத் தேவர்கள் பயங்கொள்ளும்படி யெய்தனன். அதுகண்ட பிரளயன் அவ் வஸ்திரங்க ளனைத்தையும் அக்கணத்தே மாற்றி, தேவகண்டகன் சிரத்திலும் நெஞ்சிலுந் தாக்கும்படி அம்புதொடுக்கக்க்ண்ட அவுணன் கண்களில் நெருப்புப்பொறி பறக்க, பிரளயனது மார்புக் கிலக்காக மூன்று பாணங்களை விட்டனன். அப் பாணங்கள் மார்பில் தைக்கப் பிரளயனானவன் ஒரு பாணத்தால் தேவகண்டகனது பருத்த வில்லை ஓர் கணைதொடுத் தறுத்தலும், தேவகண்டகன் மற்றொரு வில்லையெடுத்து ஒரு பாணத்தினால் பிரளயனைச் சாட, பிரளயன் தேரழிந்து பூமியிற் சாய்ந்து, பின்னும் எழுந்து ஓர் தண்டத்தால் கடியக்கண்ட தேவகண்டகன் வாளாயுதத்தால் அத் தண்டத்தைப் பொடிபடுத்தவே ஆலகாலன் என்னும் பூதவீரன் மனம்பொருது தேவகண்டகனை யெதிர்த்து வீரங்கூறிக் கார்முகம் வளைத்து, பிறைக்கணைகளைத் தூற்றி, தேவகண்டகன் உடலினின்றுங் குருதி

பெருகும்படியாக விடுத்தனன். தேவகண்டகன் தனது அஸ்தி ரத்தால் ஆலகாலனுடைய தேரைச் சிதைத்து, நெடிய வில்லையும் அறுத்தெறிந்தான்.

ஆலகாலன் மற்றொரு இரதமும் வில்லுங் கொண்டு பாணவருஷம் பொழிந்து, அவுணர்தானைகளைத் தடிந்தும், மதக் களிறுகளைப் பிளந்தும், தேர்களைத் துகள்கண்டும், குதிரைகளைக் கொன்றும், சின்னா பின்னப் படுத்தினன். தேவகண்டகன், பிர்மாவினால் பெற்ற வரத்தினையும் தோளின் திறத்தினையும் வாளின் வீரத்தையும் எண்ணி ஆர்ப்பரித்துப் பல பாணங்களால் சாரதப் படைகளின் கரங்களை முறித்தும், யானைக் கூட்டங்களையும் குதிரைப் பந்திகளையும் பல தேர்களையும் சிதைத்துத் துகள் கண்டும், பின்னரும் ஒரு அர்த்தசந்திர பாணத்தை மார்பிற் கிலக்காக ஏவ, ஆலகாலன் அதனை ஓர் அம்பினால் மாற்ற விரையுங்கால், தேவகண்டகன் பத்துப்பாணங்களால் ஆலகாலனைத் தரையில் வீழ்த்திப் பொடிபடுத்தினன். அதுகண்ட அக்கினி காலவேகன் கும்பன் தண்டி சக்கிரன் விபாண்டகன் சாலன் சாம்பன் ககாகரன் என்னும் படைத்தலைவர் பலரும், தேவகண்டகனது போர் முகத்திற் புகுந்த கனன்று சீறி அசுரர்களது தலைகளையும், யானை தேர் குதிரைகளையும் இருப்புலக்கைகளால் துகள்படுத்தி வெற்றிச்சங்கம் முழக்கினர்.

மோதினா ரசுரர் சென்னி முசலத்தாற் பிதிர்க ளாகக்
காதினர் கொடிஞ்சி யந்தேர் கரிபரி வெற்றிச் சங்கம்
ஊதினர் நெய்த்தோர் வெள்ளம் உவரிவாய் ஓடு வித்தார்
பூதிசா தனம் புனைந்த பூதமெய்ப் பூத வீரர்.

---

## உ. திருநந்திதேவருக்கும்தேவகண்டகனுக்கும் யுத்தம்.

தேரொடும் அவுணர் தம்மைத் தெண்டிரைக் கடலுள் வீசும்
காரென வயிர்க்கு மாறு களிற்றினைக் காயத் தோச்சும்
பாரகம் சேப்பிற் றென்னப் பரிகளைப் பதத்த ரைத்தும்
வேரினால் வடுகன் றந்த விழுமிய பூத வெள்ளம்.

பூதிசாதனம் புனைந்த திருமேனியை யுடைய பூதவீரர்கள் அவுணர்களைத் தேருடன் பறித்துக் கடலில் வீசியும், மேகசாலங்களோ என வியப்புறுமாறு யானைகளை மேலே வீசியும், குதிரை

களைக் காலால் தேய்த்தும் வடுகநாதரது மேன்மைமிக்க பூதவெள்ளங்கள் வீறி விளங்கின.

இவ்வாருக அவுணசேனைகள் படாத பாடுபடக் கண்ட தேவ கண்டகன், மாரிக்காலத்து மழையைப்போல பாணவருஷங்களைப் பொழிந்து, ஆலகாலன் ஆகிய பூதவீரரின் வலியை அடக்கினன். கைலையங்கிரியின் காவற் கடவுளாகிய திருநந்திதேவர் திருவுளமறிந்து, ஊழிக்கால உருத்திரனைப்போலப் பெருந்தடந் தோமிசைப் போர்க்கோலங் கொண்டு, பெரிய வில்லை வளைத்து, பெருங்குணத்தொனிசெய்தனர். அவ் வொலியானது அண்டத்தைப் பிளக்கவும், மகாமேரு பர்வதமானது கிடுகிடென அதிரவும், அலைகடல் அடங்கியொடுங்கவும், பொன்னுட்டவர்மகிழவும், அம்பருத்தூணியினின்றும் செந்தீக்கணைகளைத் தெரிந்தெடுத்துவிடுத்தனர். இருட்கூட்டம் போல்நிறைந்திருந்த அவுணப்படைகள் யாவையும் மாய்த்து, தேவகண்டகனுகிய கொடியோனது வலிய தேரையும், தேரிற் பூட்டிய குதிரைகளையும், தேரை நடாத்திய சாரதியையும் அழித்து, அவ் வவுணனது வில்லையும் இரண்டு துண்டாக்கி அம்பருத்தூணியையும் அறுத்து, அவனுக்கு உதவியாக நிறைத்துவைத்திருந்த படைக்கலன் யாவையும் தொலைத்து நந்தியந் தேவரின் செந்தீக் கணையானது திரும்பியது. தேவர்கள் மகிழ்வெய்தினர். தேவகண்டகன் கிளைகள் தறிபட்ட மரம்போல ஆனன். அவனுக்குத் தாமரை மலரில் வசிக்கும் பிரமதேவன், முன்னுளில் தலையில் எழுதிய வாழ்நாள் முடிவுற்றதென்று தேவர்கள் களிக்க, யுத்தகளத்தினிடத்து தேவகண்டகன் மயங்கிச் சோர்ந்து,

கொடுஞ்சியத் தேரு மின்றிக் கூரிய கொடுங்கோ லின்றி
அடுந்திறற் பதாதி யின்றி அரும்பெறற் புரவி யின்றி
நெடுங்கைமா யானை யின்றி நிழல்மணி வைய மின்றி
ஒடுங்கினன் வறியன் அந்தோ! ஒருவனய் நின்ரு ழிந்தான்

அப்படி நின்ற தேவகண்டகனைப் பார்த்துத் தேவர்களால் தொழப்படும் தாயினு மினியனுகிய தம்பிரான் உறையும் திருக்கையிலைமலையைச் சுரிகைதாங்கிக் காவல்புரிகின்ற திருநந்திதேவர் திருவுளமிரங்கி 'அசுரர்கட்கு அழிவு நேர்ந்தது அறியாது வென்றியை யெங்கள்பாலும் விரும்பிய முழு மூடனே! தனியனுகிய உன்னைக் கொல்லுதல் போரின் தாத்ததன்று. ஆதலின், இன்று

போய் நாளைவந்து, பொருதொழில் புரிதியென்று கூறியருளிய வாசகத்தைக் கொடியோனாகிய தேவகண்டகன் கேட்டுக் கனன்று விரைந்து பூமியிலிருந்து ஓர் மலையைப் பெயர்த்து வீசிப் பல பூதப்படைகளைப் பொடிபடுத்தினன். அப் பாவியின் செய்கையை எமது நந்தியந்தேவர் பார்த்து, அவனது ஆவியைக் கொள்ளும்படி கட்டளையிட்டு ஓர் அம்பை யேவ, சிறந்த அவ் வாளியானது தேவகண்டகனது நான்கு தலைகளையும் கொய்து கடலில் தள்ளியது. அதுகண்ட தேவர்கள் நந்தியந்தேவரின் அருளினால் நாங்கள் பிழைத்தோம்; அலைகடல் சூழ்ந்த நிலவுலகம் துன்பத்தினின்றும் விடுபட்டது; பாதலமும் நன்மை யடைந்தது எனப் புகழ்ந்து தேன்கள் துளிக்கின்ற பூமழை பொழிந்தனர்.

நாங்க ளுய்ந்தனம் நந்தி யருளினாற்
தீங்கு நீங்கின்று தெண்டிரை வையகம்
பாங்கு பெற்றது பாதலம் என்மனர்
தேங்கொள் பூமழை சிந்தினர் வானவர்.

---

## கூ. விநாயகக்கடவுளுக்கும்கும்பாண்டகனுக்கும் யுத்தம்.

யானை வைய மிவுளி பதமெனுஞ்
சேனை சூழவத் தீயன் வருதலு
மானை யானன னாதி கணத்தரு
மேனை யோரு மிபமுகற் சார்ந்தனர்.

திருநந்திதேவரால் தேவகண்டகன் தென்றிசை சேர்ந்த செய்தி கேட்ட பாவகாரியனாகிய கும்பாண்டகனென்னும் அவுணசேனைத் தலைவன், கண்களிற் கனற்பொறி பறக்க, ஆகா! பனித்துளியொத்த தேவர்களை மலையாக மதித்தனையோ? என் பெயர் வரைந்த அம்பைக் கண்டவுடன் மாட்சிமிக்க வலியினர் எவரும் அழுங்குவரன்றோ? என அவுணர் பெருமானாகிய சூரபத்மன் முன்னம் விருதுகூறி வந்தோமே; இதுபோது யுத்தகளத்தில் பூதப்படைகள் சாட வாடியுள்ளோமே; தேரையானது பாம்பினைத் தின்ற திறமே போல, போரில் வல்லவனாகிய தேவகண்டகனது பெரு வலியை யழித்தொழித்த பெருந்திறல் வாய்ந்த நந்தியை ஓரம்பினால் உயிர்பருகுவே னென விரைந்து ஆர்த்து இரதம் ஏறினன். ஓர் வரையின் மீது மற்றோர் மலையானது கவிழ்ந்ததை யொப்ப, தனது தோம்பி

னிடத்தில் பூமியை யேந்திய வராக மூர்த்தியைப் போல் வலியுற்ற கும்பாண்டகன் திரிலோகமுந் திடுக்கிட, கடலென்த்திரண்ட சதுரங்க சைநியங்களுடன் வருவது கண்ட ஆனை முகக் கடவுளின் சேனைத் தலைவர் ஆதிய எவரும் ஆனைமுகக் கடவுள்பாற் சார்ந்திருந்தனர். அஷ்ட திக்குகளிலுள்ள மலைகளெல்லாம் வந்து நெருங்கினபோன்று, நால் வகைப் படைகளும் தம்மைச் சூழ, தேவர்கள் தம்பணிகளைச் செய்ய, மிகப் பரிவுடன் நந்தி தேவர் பணிந்து பக்கத்தில் வர, வேத உபநிடதங்களாலும் அறியப்படாத ஆனைமாமுகக் கடவுள், தன் திருவடிக் கன்பர்கள் காண எழுந்தருளி நிற்பக் கும்பாண்டகன் மிகக் கனன்று, அண்டமும் வெடிக்கும்படி வீர நகை செய்து, தண்டம் ஒன்றைத் தனது பருத்த கரத்திற்கொண்டு மேக வாகன னாகிய இந்திரன் நடுங்குமாறு எறிந்தனன். தேவர்கள் மனந்திடுக்கிட்டு ஓலிடும்படி தாவி தழற் பொறிகளைச் சிந்தி வருகின்ற அத்தண்டத்தை, எமது ஆருயிர் அனைய அருட் கடலாகிய நந்திதேவர் ஓர் அம்பினால் இரு துண்டாக்கினர். இந்திரனை இலக்காக எறிந்த தண்டம் துகளாகக் கண்ட கும்பாண்டகன் பெருத்த கோபங்கொண்டு நெடிய வில்லை வளைத்து, மேன்மை மிக்க புகழ்பொருந்திய திரு நந்தி தேவர்மீது எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகிக்க, ஊழித்தீயொத்த ஓர் அம்பினால் அவைகளை விரைந்து துகள் கண்டு சப்த சமுத்திரம் போல் நிறைந்திருந்த அவனது படைகளை யெல்லாம் அழித் தொழித்தனர். தன் படைக ளெல்லாம் செக்கிலிட்ட எள்ளைப் போல் நைந் தொழியக் கண்ட கும்பாண்டகன் சக்கரப் படை யொன்றை யேவ, அக்கணமே நந்தி தேவர் அரிய ஓர் அஸ்திரத்தைப் பிரயோகிக்க, அதனையும் அச் சக்கரப்படை முறியச்சாடி வருதல் கண்ட நந்தி தேவர், அரிய தவத்தினால் அளப்பிலா வரம் பெற்றுள்ள இவன் ஆவி கவர்தற்கு, ஒற்றைக் கொம்பினனாகிய விநாயகக் கடவுளே வலியராவர். இவன் நம்மீது விடுத்த சக்கரமானது நமது பாணத்தைச் சிதைத்த தென்றால், இந்திரன் பிரமா முதலியோருக்கு இவனே இயமன்போலும் என நினைத்த எல்லையில், அச் சக்கரப் படையானது ஆகாயத்திற்கிளம்பி உருத்துச் சீறிக் கொடிய கனற்பொறிகளைக் கக்கிக்கொண்டு காலனுங் கலங்கும்படி விரைந்து போகக் கண்டு, முன் ஆலகாலவிஷத்தைக் கண்டாற்போற் பயந்து, தேவர் பூதர் முதல் யாவரும் ஓலமிட்டு வருந்தித் தளர்ந்து கலங்கிச் சிதறினர்.

இவ்வாருக இந்திராதி தேவர்களும் பூதப் படைகளும் இரிந்தோடக் கண்டு, வேத மத்தியில் விளங்கும் அரும் பொருளாகிய ஐங்கரக் கடவுள், பகைவனது சக்கரப் படைக்குச் சிறிதும் பயப்படாதீர்கள். புண்ணியத்தைப் பாவம் வெல்லமாட்டாது; புண்ணியமனத்தினராகிய நீவிர் மன வெழுச்சி யடைவீர்களாக! எனத் திருவாய் மலர்ந்தனர். பிரணவப் பொருளாகிய பெம்மானின் அருண் மொழி கேட்டு மிகுந்தஇன்பவெள்ளத்துட்டிளைத்து சிவகணங்களும் தேவகணங்களும் இனிதே நின்று மகிழ்ந்து பார்த்திருந்தனர். நெடிய பொன்மேரு மலையை நிகர்த்த அழகிய திருமேனியையுடைய ஆனைமுகத் தண்ணல், வெற்றியும் மேன்மையும் உடைய அகோர வீரபத்திரப் படையை, அசுரர்க ளெல்லாம் அழிந்தனர் என்று தேவர்கள் போற்றிசைக்கும்படி விடுத்தனர். மிகுந்த வேகத்தோடு பொங்கி யாவரும் பயங்கொள்ளும்படி தீப்பொறிகளை யிறைத்துத் திசையிருளையெல்லாம் ஓட்டிச்சென்று கும்பாண்டகனது சக்கரப் படையைப் பொருதியுண்டு பல்வேறு விளையாடல்களும் புரிந்தது. நிணம் நாறுகின்ற வேல்தாங்கிய அவுணர்களின் சிரங்களைத் துமித்தும், கரங்களை யறுத்தும், கண்களைப் பிடுங்கியும், வலிய மார்பைப் பிளந்தும், வயிரம் பொருந்திய உடலைக் கிழித்தும், யானைப் பந்திகளிற் புகுந்து புழைக்கைகளை அற எறிந்தும், மத்தகத்தைப் பிளந்தும், தந்தங்களைப் பிடுங்கியும் கொன்று அழித்தும், குதிரைப் பந்திகளிற் புகுந்து சின்னபின்னப் படுத்தியும், மலைகள்போலக் குலவியுள்ள தேர்க்கூட்டங்களைச் சிதைத்து அழித்தும், நால்வகைச் சேனைகளையும் அள்ளி அப்பால் எறிந்து அலைபைச் செய்கின்ற கடலிற் போட்டும், வெந்தழல்போன்று வெள்ளிடையாக்கியும் ஓர் இமைப் பொழுதில் அப் புனித பாணமானது திரும்பியது. திரிபுரம் பொடித்தவரும் புலியதள் உடுத்தவரும் ஆகிய சிவபரம்பொருளின் திருக் குமாரரும், திருக்கரத்தில் மோதகம் ஏந்திய முன்னவனும், வல்லபை மகிழும் மணாளனும், சீரிய ஆனைமுகச் செம்மலும் ஆகிய பெருங்குணத் தைங்கரப் பிள்ளையாரின் கீர்த்திகளைப் பாடி, காக்கை கழுகு பருந்து காளி கூளி இடாகினி ஆதிய பைசாச கணங்கள் பெரு விருந்தருந்திக் களிப்புற்று நடம்புரிந் தார்ப்பவும், எண்ணில்லாத கவந்தங்கள் வெண்பற்களைக்கறித்துக் கூடியாடவும், இரத்தவெள்ளமானது பெருக்கெடுத்து ஓடவும், சிவந்த கண்களையும் கறுத்த தேகத்தையும் உடைய கும்பாண்டகன் கண்டு, தனக்கு

அழிவு வருவது தெரியாது அகங்கரித்து உளம் புழுங்கி கையிலுள்ள வில்லைப் பார்க்கின்றான்; அழிந்தொழிந்த தானைகளை எண்ணுகின்றான்; வலிபொருந்திய தனது விசாலமாகிய தோள்களைப்பார்க்கின்றான்; ஒப்புயர்வற்ற தற்பரமூர்த்தி விடுத்த பாணத்தின்வலியைப்பெரிதும் சிந்திக்கின்றான்; பூதர்களின் இறுமாப்பை உவக்கின்றான்; வரப்பிரசாதிகள் இறுமாந்திருக்கின்ற தேவலோகவாசிகளின் கூட்டத்தைப் பார்க்கின்றான். பார்க்கின்ற பல பொருள்களும் தனக்குப் பகையுடைமையாகவே கண்டு, உடம்பு முற்றும் வேர்த்து,வெகுளி மேற்கொண்டு, அம்பைப் பொழிகின்ற பெரிய வில்லை வளைத்து, நாணிறுக்கிப் பூமியதிர ஆர்த்து, நின்மல மூர்த்தியாகிய விநாயகப் பெருமானைப் பார்த்து, என்முன் னிற்கின்ற வலிமை மிக்க பூதர்களையும், அவர்கள் பக்க முள்ள தலைவர்களையும் பதறிக் கதறும்படியாகச் சிதற வாட்டி, வீற்றிருக்கின்ற தேவர்களின் கால்களில் விலங்குபூட்டி, விரிந்த கீர்த்திமானாகிய சூரபன்மனது வெற்றிபொருந்திய அவைக்கண் விடுப்பேனென்று கூறிச் சரங்களை வாரி வாரி வரிசை வரிசையாகப் பிரயோகித்தனன். அவைகள் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரமாக உலகமுழுதும் பரந்தன. சாரதர் ஆவி சிதைந்து மண்மேற் சாய்ந்தனர். உலகில் இவனோடு பொருதவல்லவர் யார் என்று கூறித் தேவர்கள் ஒளித்துக்கொண்டனர். படைகளும் பூதவீரர்களும் வாடுவதையும், தேவர்கள் ஏங்குவதையும் கண்டு, எம்பிரானாகிய விநாயகக்கடவுள் கும்பாண்டகனாகிய கொடிய பாவி முடியும்படி செய்தல் அவசியம் என்றுகருதிப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தனர். அவ் வஸ்திரமானது வடவைக்கனலையொப்ப உருத்தெழுந்து சீறி, அண்டங்கள் நடுங்க விரைந்து போய்ப் பகைவர்களுடைய அங்கங்களைக் கூறுகூறாக்கியும், யானைகளையும் குதிரைகளையும் இரதக்கூட்டங்களையும் சிதைத்தும், கும்பாண்டகன் ஏறியிருந்த தேரையும், தேரிற்பூட்டிய குதிரைகளையும், தேர்ப்பாகனையும் சின்னபின்னப்படுத்தி, எந்தக்காலத்திலும் தளர்வடையாத கும்பாண்டகனது வில்லை அறத் தூறியும், வளமிகுத்த அம்பறாத்தூணியை வற்றத்தடிந்தும், கவசத்தைப் பொடிபடுத்தியும் ஒரு நொடிக்குள் திரும்பியது. நலனெலாமிழந்து கும்பனானவன்வெறும்முண்டிதனாக நின்றான். எல்லாம் அறிபவராய் நீலமணிகண்டராய் விளங்கும் எமது கற்பகக்கனியாகிய விநாயகக்கடவுள் கும்பாண்டகனைப் பார்த்து, நீர்க்குமிழி போன்ற வாழ்வை நித்தியமாக எண்ணி,

அறநெறியிற் செல்லாது செருக்குற்று மறநெறியாற்றும் உங்கள்
இனமெல்லாம் மாளக்கொடுத்து, வறிதேகிற்கின்ற உன்னைக் கொல்
லுதல் அழகன்று ஆதலின், போதியென்றருளினர். திருவுள மிரங்
கிக் கூறியது கேட்ட கும்பாண்டகன் திக்கெலாங் குலுங்கக்கோரைப்
பற்கள் விளங்க நகைத்து முன்னம் எங்கள் மரபில்வந்த சிந்துரன்
என்னும் அவுணத்தலைவனை உயிர்கொன்று ஒழித்தனை. அப்படியா
னஉன்னை யெம்மவர்கள் சிவனுடைய முதற்பிள்ளையென்று மதி
த்துக் கொல்லாது விட்டனர். இன்னமும் எங்களோடு பொருது
இடர்விளைக்க எளிய தேவர்கள் சொற்கொண்டு உவந்தனை;உன்உயி
ருண்டு எனது கோபம் ஆறுவேனென்று மாற்றங்கூறி யுத்தத்து
க்குப் பயந்து நாலாபக்கங்களிலும் உருக்கரந் தோடிய எல்லோரை
யும் கூவி, அவுணகுலத்திற் பிறந்தீர் போரிற் றோற்று உயிர்வாழ்
தலினும் சாதல் நன்றன்றோ? உடல் பெற்ற எவரும் ஓர்நாள்முடி
தல் இயல்பன்றோ? புகழை யிழந்து உயிர்வாழ்தலினும், உயிர்வி
டுத்தேனும் புகழை நிறுவி வீரசுவர்க்கம் புகுதல்மேன்மையல்லவா?
என்றெல்லாம் ஆகமம் காட்சி அனுமிதியளவைகள் கொண்டு கூறிய
நயமொழிகேட்டு, திசைதொறும் ஓடிய அவுணர் கூட்டங்களெல்
லாம் வந்து திரண்டு தன்னைச் சூழத் தீயோனாகிய கும்பாண்டகன்
நெடியதோர் தேர்மிசையேறி ஒருவில்லை யெடுத்துவளைத்துக் கொடி
யபாணங்களைக் கோடிக்கணக்காக மேகவருஷம்போலப் பூதப்படை
கள்மீது பொழிய, அவர்கள் எதிர்நிற்க ஆற்றாராகி திசைதொறும்
விரைந்தோடினர். சூரியனும் ஒளித்தனன்; அஷ்டதிக்குப் பாலகர்க
ளும் ஒளித்தனர்; பிர்மவிஷ்ணு ஆதிய தேவர்களும் விண்ணின்றும்
மறைந்தனர்; *அதிரதர், ஆலசாலனாதிய பூதகணத்தலைவர்களும்
மனங்கலங்கி, இனி வேறுகதியில்லையென்று கணேசமூர்த்தியின்
திருமுன்புவந்து சேர்ந்தனர்; நஞ்சம்அஞ்சி நாரணனாதியோர் பர
மேஸ்வரனை வந்தடைந்தாற்போல, போர்த்திறன்வல்ல சிவகணத்த
வர்களெல்லாம் வந்து துன்பத்தைப் போக்கியருள்வாயென ஒரு
கோட்டிறைவரைச் சார்தலும், மூலமுமுடிவு மில்லாத சிந்துரவத
னர், பதினான்கு உலகங்களும் உய்யக் கிருபைபாலித்து, அஸ்திர
மழை பொழிகின்ற கும்பாண்டகனது கைத்திறனழகாயிருக்கிற
தென்று சிறுநகைசெய்து, தீயோனாகிய அவன் இவ்விதம் ஓர்முகூர்
த்தகாலம் செய்வனேல், மூவுலகங்களும் திண்ணமாக மடிந்தழியு

மென்றெண்ணித் தாமரைமலர்போன்ற தமதுதிருக்கரத்தில் வீற்றி விளங்காநின்ற அங்குசப்படையைக் கடைக்கணித்து, இங்கு நம்மை வந்தடைந்த தேவர்களுக்கு இடர்புரிகின்ற பகைவர்களை ஒருங்கே இப்பொழுதே சாடித் தரையில்வீழ்த்தி, வலிய உருப்பெற்றுவிளங்கும் வஞ்சகனாகிய கும்பாண்டகனையும் சிரந்துணித்து, சுத்தோதகக் கடல்படிந்து துரிதமாக வருகெனச் செங்கனிவாயாற் றிருவாய் மலர்ந்து உய்த்தனர். எண்ணரிய கிரணப்பரப்பினையுடைய இருபதினாயிரங்கோடி சூரியர்கள் சேர்ந்து ஒருருப்பெற்றாற்போலச் சிரித்தெழுந்து எங்கணும்பரந்து, விண்மண் பாதலங்களும் திசைப்பரப்புக்களும் அஞ்சவும், நமனும் ஏங்கி நடுங்கவும், சுடுகனற்பொறிகளைக் கக்கிக்கொண்டு, இமை கொட்டுமுன் அளவில்லாத சுடுசரங்களை விசிறிப் பகைவர்களை அழித்துக் கும்பாண்டகனாகிய கொடியவன் தேரையும் அதிற் பூட்டிய குதிரைப் பந்திகளையும் சாரதியுடன் அழித்து வில்லையும் அம்பறாத்தூணியையு மறுத்தெறிந்து, நெடியபனைபோல நின்ற அவ் வவுணனது அங்கங்கள்தோறும் பாய்ந்து சித்திரவதைசெய்து கொன்று அவனது தலையை அண்டத்துக்கு அப்பாற் போக மேலே வீசி யெறிந்து, அவனுக்குப் பெருந் துணையாக மொய்த்து இவ்வளவென்று கணிக்கலாகாது பரவியிருந்த பெரும்படைகளைக் காய்ந்து, சுத்தோதகக் கடலிற் றோய்ந்து, படவரவும் வன்னியும் வளர்மதியும் அறுகும் தரித்த வித்தகனாகிய விநாயகக் கடவுளின் திருக்கரத்தில் வந்து இனிதிருந்தது. அது கண்ட தேவர்கள் கைகொட்டி ஆர்த்து, மிகுந்த ஆனந்த வாரியிற் றிளைத்துக் கற்பகப் பூமாரி பொழிந்து, பரவசத்தராய்த் தங்களை மறந்து, முன்னோனாகிய விமல விநாயகப் பெருமானது திருத்தாள் மலர்களைச் சென்னி சேர்த்தனர்.

அங்கது கண்ட வானோர் ஆவலங் கொட்டா நின்றார்
பொங்கிய கழிபே ரோகைப் புணரியிற் றிளைத்தார் கற்பத்
தருக்கவின் னறும்பூ மாரி தூர்த்தனர் பரவ சத்தர்
தங்களை யுணரார் முன்னோன் றாண்மலர் முடிக்க ணிந்தார்.

## ௪. விநாயகப்பெருமானுக்கும் வக்கிரதமிட்டிரனுக்கும் யுத்தம்.

வன்னி யுந் துணர்க் கொன்றையுந் தும்பையும் மத்தமு நறுந்தாது
துன்னு தாதகித் தொங்கலுந் தங்கிய சுடர்விடு நெடுவேணி
முன்ன வன்முனம் பனிவரைப் பிடியினை முயங்கினன் மகிழ்ந்தீன்ற
என்னை யாளுடை எரம்பன் அப்படை யெழுச்சிகண் டிருந்தானல்.

கும்பாண்டகனுடன் வந்த அவுணப் படைகளில் அழிந்தொழிந்தனர்போகத் தப்பிப் பிழைத்த சிலர், தமிட்டிரர் என்னும் இரு சோதரர்களாகிய அவுண வீரரிடம் சென்று கிலேசத்துடன் நிகழ்ந்தவற்றைக் கூறினர். யானைமாமுகமுடைப் பிள்ளை யேவிய ஓரங்குசப் படையானது, திசையெலாந் திரண்டு மாநிலம் முழுதும் கடலெனப் புரண்டு சென்ற நால்வகைச் சேனைகளுடன் கூடிய வலிய கும்பாண்டகனைச் சூரியன்முன் பனிபோலச் செய்தது, என ஒற்றர்கள் வருந்தியுரைத்தது நெருப்பைப்போலக் காதுகளில் நுழைய மனம் வெம்பித் துன்பப்பட்டு பெருமூச்செறிந்து பொங்கியெழுகின்ற கோபத் தீயானது, உடலிலுள்ள ஒன்பது துவாரங்களிலும் கொழுந்துவிட்டெரிவதுபோன்று கனன்று தமிட்டிரர் இருவரும், "கொசுகானது கருடனை வென்றாற்போலவும், ஆடானது சிங்கத்தைக் கொன்று உயிருண்டதுபோலவும், சர்ப்பாபரணதரன் தந்த தந்திமுகப்பிள்ளைகையில் ஏந்திய அங்குசப்படையானது கும்பாண்டகனைக் கொன்றது அதிசயமே!" எனப் பகர்ந்து, அவ் விருவரில் முன்னோனாகிய வக்கிரதமிட்டிரன் எட்டுத் திக்குகளும், நெடிய கடல் சூழ்ந்த மண்ணுலகமும் கலங்கியேங்கும்படி செஞ்சடைக் கடவுளாகிய சிவபிரான் பெற்ற யானைமுகப் பிள்ளையை இக்கணத்தில் உயிர் நீக்குவேன் என்றெழுந்து தேரேறினன். தன்னைச் சூழ இணையில்லாத ஒருகோடிதேர்களும், வலிமைமிக்க இரண்டுகோடி யானைகளும், பஞ்சகதிகளைக்கொண்டு வேகமாகப்பாய்கின்ற நான்குகோடி குதிரைகளும், அம்பு வில் தூணி ஆதியவைகளைத் தாங்கிய கைகளையுடைய எட்டுக்கோடி அவுணவீரர்களும் வந்தனர். அவுணவீரர்களின் கால்கள் மண்ணுலகை அளக்கத் தகுவன; தோள்களோ திசைகளை முட்டும்; தலைகளோ ஆகாயத்தை அளாவும்; ஆர்ப்போ சத்தியலோகத்தை அணவும்; கண்களிற் பறக்கும் கனற்பொறியானது . யுகாந்த காலாக்கினியைப்போல உலகெங்கும்

பரவும், என்று சொல்லும்படியாகவும், தேவர்கள் மருளும்படியாகவும் தனது படைகள்சூழப் போர்க்களத்திற் புகுந்தான். இன்னும், ஆயிரம் பேய்களும், ஆயிரம் சிங்கங்களும், ஆயிரம் யானைகளும், ஆயிரம் குதிரைகளும் பூட்டிய இரதத்தில் மாதமிட்டிரனுனைவன் வல்லமைமிக்க நால்வகைச் சேனைகளும் தன் பக்கவிற் றொடர்ந்துவர, வட திசையினின்றும் வருகின்றான். இவ்விதமாகப் பெரும்படைகள் திரண்டுசெல்லத் திசைகளெல்லாம் இருண்டன; மூவுலகமும் நடுங்கின; மோனநிலையுடைய முத்தர்களும் மருளுற்றனர்; அலைகடலின் ஓசை யடங்கியது; சூரியன் ஒளிமழுங்கித் துன்புற்றனன்; பூதவீரர்களும் ஏங்கித் தியங்கினர்; உலக முழுதும் ஒலிடும்படிக் கடுகிவருகின்ற சேனைத் திரள்கள் ஆகாயத்தையும் பூமியையும் மறைத்தன. இவ்வாறு வந்து நெருங்கக் கண்ட இந்திராதி தேவர்களும், இவ் வுலகமானது இவ்வளவு பெருங் கூட்டத்தை யெங்ஙனம் அடக்கி வைத்திருந்தது? போர்க்களத்தில் எய்தி இவர்களெல்லாம் ஓர் தினத்தில் மாயும்படியாக இவர்கள் தலையில் எழுதிய பிரமதேவன் வாழ்க! என்றனர்.

வன்னி, கொன்றை, தும்பை, மத்தம், குருக்கத்தி ஆகிய நறுமலர் மாலைகளணிந்து பிரகாசியாநின்ற நெடிய சடைக்கடவுளாகிய முதல்வன், முன்னம் மலைமகளாகிய பிடியினைக்கூடி மகிழ்ச்சியிற் பெற்றவராகிய யென்னையாளுடைய விநாயகப்பெருமான் அப்படையெழுச்சியைக் கண்டிருந்தனர். அவரை வக்கிரதமிட்டிரன் நெருங்கி,'வலிமைமிக்க கும்பாண்டகனைக் கொன்ற அவ் யானைமுகத்தவனையும் அவனது கூளிப்படைகளையும் ஒரு நொடிப்பொழுதில் அழிப்பேன்.' என்று ஒருபெரிய மலையைப்பறித்து எறிந்தனன். அம்மலை, தம்நேரேவருதலை யறிந்த பூதப்படைகள் பெரிதும்வருந்தி விநாயகக்கடவுளை யடைந்து காத்தருளும்படி வேண்ட, வேதமுதல்வராகிய வேழமுகக்கடவுள் பூதப்படைகளின் புன்மையை யொழிப்பான் திருவுளங்கொண்டு தமது திருக்கரத்தில் விளங்கும் வைரவாட்படையினை விளித்து,'ஆலகாலத்தையொப்பவருகின்ற அம்மலையைத் துளைத்து எமக்கு உறைகோயிலாகச் செய்துவருக' என விடுத்தனர். அநேக சூரியர்களைப்போல ஒளிபரப்பிவரும் அப்படை திக்குகளெல்லாம் நடுங்கும்படி வந்த மலையைக் குற்றமற்ற குகையாகத் துளைத்துப் பெருமான் திருக்கரத்து வந்து அமர்ந்தது. இங்

னம் குலிசவாட்படை தூளைத்தாக்கிய கோவிலின்கண்ணே விநாய கப்பெருமான் எழுந்தருளியிருந்தார். அதுகண்ட தேவர்கள் விநாய கக் கடவுளை யடைந்து, எம்பெருமானே! அசுரப்பகையைத் தொலைத்து அதன்பின் இவண் எழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அங்குசந் தாங்கிய நங்கபமுகக் கடவுள் அத் தேவர் துன்பங்கண்டிரங்கி 'நும் துயரைப் போக்குதும்' என்று செங்குருதிபொங்குஞ் செருக்களஞ் சேர்ந்தார்.

கோபமும் வலியும் வஞ்சமு மலிந்த வக்கிரதமிட்டிரன், இவ்வுலகிலுள்ள உயிர்களெல்லாம் என்செய்வோமென ஏங்கும்படி கண்களில் நெருப்புப் பொறி பறக்க சமுத்திரப் பிரளயம்போன்ற தனது சதுரங்க சேனைகளில் தருக்குமிக்க அசுரப் படைகளைப் பார்த்து பூதப்படைகளை ஓர் நொடிப்பொழுதில் பொடிபடுத்துங்களென்றான். அவுணப் பாதகர்கள் சீறி அளவில்லாத கொடிய படைகளால் முடுகிச்சாட, அவ் வமருக்காற்றாது பூதப் படைகள் அழிந்து பின்னிட்டன. அதுகண்ட தண்டி, பெரிய கதாயுதத்தைக் கையில் எடுத்து, ஆகாயத்தை அளாவிய தேர்ப் படைகளையும் வேகம் மிகுத்த குதிரைப் படைகளையும் யானைப் படைகளையும் அசுரவீரரையும் அழித்து மண்ணுலகும் விண்ணுலகும் அதிரும்படி முழக்கஞ் செய்தான். வீரமுழக்கஞ்செய்து நிற்கும் தண்டியோடு சாம்பன் முதலிய படைத்தலைவர்களும் பெரிய நெருப்போடு மிகுந்த காற்றுச் சேர்ந்ததுபோல வந்துசேர்ந்து வீரநகை செய்து வில் வளைத்து அம்புமழை சொரிந்து இடியைப்போல ஆரவாரித்தனர். முப்புரங்களும் அழியும்படி சிவபிரான் விடுத்த அம்பினையொப்ப அப் படைகள் திதிபுத்திரர்களாகிய அவுணர்களின் தலைகளையும் யானை குதிரைகளையும் அறுத்தன. நாய், நரி, கழுகு, பேய் முதலியன பெருவிருந்தருந்தின. இங்ஙனம் தம் படைகள் பட்டொழிந்ததைப்பாவமேஉருவாகிய வக்கிரதமிட்டிரனுணர்ந்து, 'திருமால் முதலிய தேவர்கள் காணும்படி பூதப்படைகளை எமனூரிற் குடியேற்றிக் கும்பாண்டகன் பகைவனும், யானைமுகத்தவனும், பித்தன் மகனும், யானை, மனிதர், பூதம் ஆகிய மூவகை வடிவத்தனுமாகிய பகைவனது உடலைத் துண்டமாக்குவேன்' என்று தன் ஊக்கத்தை வாய்கொடு உளறி, ஆலகால விடத்தையும் கடலிற் குதிரைமுகத்தோடு தோன்றும் வடவாமுகாக்கினியையும் நிகர்ப்பக் கோபித்துக் கால

னுங்கண் டஞ்சத்தக்கதும் விந்தமால்வரை வலிகொண்டெழுந்து தேவருலகத்தை அழிக்கச் செல்கின்றதோ என்று சொல்லத்தக்க துமாகிய ஒரு தேரிலேறினன். அவுணப் படைகளெல்லாம் அத் தேரைச் சூழ்ந்து ஆரவாரித் தெழுந்தன. அப் படைகளின் காற் றுகளானது அட்டதிக்கு யானைகளின் கைத்துவாரங்களைத் தூர்த் தன. அவுணப் படைகளின் ஆரவாரத்தைக் கண்ட பூதப் படை கள் பயந்து திசைதோறும் ஓடின. தேவர்கள் மனங் கலங்கி, நந்திதேவர் திருவடிகளில் வீழ்ந்து, ஐயனே! அவுணப்படை ஆர வாரித் தோங்கின. நம் படைகளோ வெருவித் திசைதோறும் ஓடுகின்றன. இது திருவுள்ளம்பற்ற வேண்டுமென் றிறைஞ்சினர். தேவர் துயரைக்கண்ட நந்திதேவர் அவர்களைத் தேற்றி, குற்றமற்ற வேதங்களாலும் அளந்தறியப்படாத முழுமுதற்கடவுள் தந்த விநா யகக் கடவுளை யடைந்து வணங்கி அசுரர் ஆக்கத்தையும் கணங்க ளது ஏக்கத்தையும் நவின்றார். ஒப்பற்ற மகாமேருவை வில்லாக வளைத்தயெம்பெருமா னருளிய மூத்தபிள்ளையார் புன்னகைபுரிந்து, 'நந்தீ! அசுரர் மறமும் அமரர் திறமும் மிக நன்று; இக்கணமே அவ் வசுரரை வேரறுப்போம்' என்று மேருமலையனையதோர் தேரிலேறி இமயமலையைநிகர்த்த வில்லை யேந்தி பூமிதேவியின் வருத்தம் நீங்கப் போர்க்கள மடைந்தார். வாழ்நாளெல்லை முடிந்து வீழ்நாளெல்லை நண்ணிய வக்கிரதமிட்டிரன், 'இரதாரூடராய் நிற்கின்ற ஐங்கரக்கட வுளைக் கண்டு, 'இதுகாறும் எங்கு ஒளித்தனை? நன்று. இப்போது உனது படைகளோடு உன் உயிரையும் உண்பேன்' என்று போலி யுரை புகன்றுநின்றான். பூதப் படைகள் வக்கிரதமிட்டிரனோடு வந்த படைகளை இருப்புலக்கைகொண்டு தலையிற் புடைத்துச் செந் நீரோடு மூளைசிதறச் செய்தன. இங்ஙனஞ் சேனைகள் மடி தலைக்கண்ட வக்கிரதமிட்டிரன் அரிய தவத்தாற் பெற்ற வேலாயு தத்தை யெடுத்து உங்கள் வலிமையும் சிறப்பும் இன்றோடு தொ லைந்ததெனச் சொல்லி யெறிந்தான். அவ் வேலாயுதம் வடவாமு காக்கினியைப்போல் நெருப்பைக்கான்று வருதலைக்கண்ட கற்பக விநாயகக் கடவுள் நகைபுரிந்து அங்குசமெடுத்து இக்கணம் நீ செ ன்று அவ் வேலின் வலி தொலைத்து அவ் விழிதகையோன் ஆவியைக் கவர்ந்து, அவன் சேனைத்திரள்களை அறச்சாடி, மலையை யொத்த யானைகளை மாய்த்து, காற்றன்ன வேகத்தை யுடைய குதிரைகளைக் கொன்று, இரதங்களை யெல்லா மழித்து விரைந்து வருதியென வி

டுத்தார். விடுத்த அங்குசமானது ஊழிக்காலத்து உருத்திரனைப் போன்று வருதலைக்கண்ட வக்கிரதமிட்டிரன், தேரினின்று மிறங்கித் தண்டாயுதமொன் றேந்திப் பூதப்படைகள் சிதறி யோடவும், திசையனைத்தும் இருளவும், பதினான்கு உலகத்துள்ள சீவராசிகள் பதைபதைக்கவும் பிரமன் முதலிய தேவர்கள் நடுங்கவும் எதிரோடி வந்தான். இங்ஙனம் வருதலைப் பிள்ளையார் விடுத்த அங்குசம் கண்டு அவன் கைப்பற்றிய தண்டாயுதத்தைப் பொடிபடுத்தி அவனது தோள்களையும் சிதறி விநாயகக் கடவுளை நிந்தித்த நாவினை அறுத்து அவனது கண்களைத் தோண்டி உடலைத் துண்டஞ் செய்து உயிரினை விண்ணுக்கேற்றிப் பின் அவனது நாற்படைகளையும் அழித்துச் சூரியனொளியும் பின்னிடச் சென்று கடலில்நீராடிக் கற்பக மூர்த்தியின் கரதலத் தமர்ந்தது. தேவர்கள் மகிழ்ந்து மலர்மாரிபொழிந்தனர்.

அரி அயனாதியோர் வெருவ ஆயிரத்தெட் டண்டங்களையாளும் சூரபத்மனது மணிமுடியோ வீழ்ந்ததென்று சொல்லும்வண்ணம் வீழ்ந்த வக்கிரதமிட்டிரன் குறையுடல் ஓர்பால் கூத்தாடிற்று. பேய்கள் ஓர்சார் ஆடின. கழுகுகள் நிணத்தைத்தின்று களித்தன. இரத்தாறு ஓடிப் பூதேவியைச் செய்யவளாக்கிற்று. இந்நிகழ்ச்சியைக் கண்ட அவுணர்தூதர் ஓடோடியுஞ்சென்று மாதமிட்டிரன் தாளில் வீழ்ந்தெழுந்து, நாக்குழற, 'ஐய! வென்றிமிகுந்த வக்கிரதமிட்டிரன் ஆனைமுகனது கை அங்குசத்தால் இறந்தான், எனக்கூறினன். அது கேட்ட மாதமிட்டிரன் ஆற்றொணாத்துயருடன் பெருமூச்செறிந்து பகைவருயிரைக் கவர்ந்துண்டு மகிழ்கின்ற கூரிய ஆயுதத்தைத்தாங்கிய பெரியகைத்திறனுடைய அண்ணாவே! சிறியயானைமுகப்பிள்ளையை வெல்லமுடியாது இறந்தனையோ! தேவராகிய யானைகளுக்குச் சிங்க ஏறு போன்றவனே! முன்பயந்து பதுங்கியிருந்த கூற்றுவன் இப்பொழுது ஆற்றல்மிக்க உன்னுயிரைக் கொண்டுசெல்ல எவ்வண்ணந் துணிந்தனனோ! கும்பாண்டகன் தேவகண்டகன்மாண்டதுன்பத்தை நீ யிருக்கின்றாயென்று நினைத்துப் போக்கினேன். இன்று நீ யிறந்த துன்பம் நான்மாண்டாலன்றி ஆறாதே! பெரும்பகைவென்று புகழ்படைத்தவுன்னைச் சுடலையிற் கூத்தாடுங் கூத்தாடிமகன் கொன்றனனோ! யாளிகர் அண்ணாவே! அண்ணாவோ!! அண்ணாவோ!!! என்று இவ்வண்ணமாகக் குகையன்ன பேழ்வாய்திறந்து அரற்றிச் சோர்ந்து வீழ்ந்தனன். வீழ்ந்தவன் தெளிந்தெழுந்து பெருமூச்செறி

ந்து பல்லினாலே இதழைக்கடித்துக் கண்களில் நெருப்புப்பொறி சிந்தக்கோபித்து, இவ்வுலகத்தைப் பிளப்பேன் என்பான்; மேருமலையைப் பொடிபடுத்துவேன் என்பான்; விரிந்த உலகத்தை வேரறச் சிதைப்பேன் என்பான்; ஆகாயத்தைக் கையால்கசக்குவேன் என்பான்; இன்னவாறு பலகூறிப் பின் எங்குலத்தவர்க்குப் பயந்து ஒளித்துத்திரிந்த தேவர்களெல்லாம் எம்மைக்கண்டு ஏளனஞ் செய்யும்படி ஆயிற்றே என்பான். என்னை? சிங்கத்தின்முன் நரிகள் கூத்தாடுதலையும், நெருப்பினிடத்துப் புழுக்குலம் குலாவுதலையும் ஒக்கும்; இத்தேவர்கள், தானவராகிய எங்களிடை மகிழ்ச்சியோடோங்குதல் நன்று; குறைவற நிறைந்திருக்கின்ற பூதப்படைகளையும், சப்திக்கின்ற வீரக்கழலினையுடைய யானைமுகப்பிள்ளையையும் இக்கணத்தே கொன்று வீழ்த்தி அவ்வுதரத்திலே மூழ்குவேன் என்பான்.

இவன் இவ்வணம் கூறிநிற்ப, யானைமுகந் தாங்கிய தனிமுதற்றலைவன் தேவர்களைப் பார்த்து, 'தேவர்களே! சமுத்திரம்போன்ற அசுரப்படைகளிற் பாதியை யழித்து வீழ்த்தினம்; இன்னும் எஞ்சியவற்றையும் யாமே ஒழிப்ப தழகல்ல; இவ் வசுரர்களை யழித்தற்கு வெள்ளிய சிலம்பணிந்தகால்களையுடைய வேதஞானமூர்த்தியாகிய வைரவக் கடவுள் அவதரித்துள்ளாராகலின், அவரதுகடமையாகவிடுத்து யாம் மலையின்கண் அமைந்த கோவிலிற் சென்று வைகுவேம்' நீவிர் விரைந்துசென்று வைரவக் கடவுளை யடைந்து நும் பகையை வீட்டி வெற்றியோடு விளங்குமின்." எனக் கூறித் திருக்கோயிலை யடைந்து விருப்புடன் வீற்றிருந்தருளினார். அங்ஙனம் பிள்ளையார் வீற்றிருந்த காரணத்தினால் அவ்விடம் சொல்லுதற்கரிய சிறப்புவாய்ந்த பிள்ளையார்பட்டி என்னுந் திருநாமம் பெற்றது.

எனவுரைத் தத்தளி யெய்தி வைகினன்
அனையதோர் காரணம் பற்றி யவ்வுழி
பனலரும் பிள்ளையார் பட்டி யென்பதோர்
இனியபேர் பெற்றதா லென்று மன்னவே.

---

## ரு. திருநந்திதேவருக்கும் மாதமிட்டிரனுக்கும் யுத்தம்.

கடிபடு கடவுளர் கணேசன் றூண்மலர்
முடிபுனைஇ வயிரவன் முன்னர்த் துன்னினர்
வடிநெடு வாட்கையம் மாத மிட்டிரக்
கொடியவன் செயலினிக் கூறு வாமரோ.

தேவர்களெல்லாம் கற்பகப்பிள்ளையாரின் பொற்பதம்போற்றி, பின்னர் வைரவக் கடவுளை யடைந்தனர். கூர்மைபொருந்திய வாளேந்திய கைகளும், வரையெனத்திரண்ட வலியதோள்களும், வலிய பகைவரையும் எளிதாக நினைக்கும் மனப்பான்மையும் உடைய மாதமிட்டிரன் எல்லையில்லாத நம் படைகளெல்லாம் இப்பொழுதே போர்க்கு எழுக என்றனன். அவ் வளவில் எழுந்தன படைகள்; எட்டுத்திக்குடன் ஆகாயமும் திடுக்கிட்டு ஏங்கின; மேகங்கள் மறைந்தன; நட்சத்திரக்கூட்டங்கள் உதிர்ந்தன; படைத் தூளி மேலே சென்று விண்ணுலகை மண்ணுலகாக்கிற்று. இமையநாட்டத் தேவரும் கண்களை மூடினர். சங்கு, பேரிகை, குடமுழா, தண்ணுமை யாதியவற்றின் ஒலிகள் உலகத்தை மருளச் செய்தன. அலைதிரண்டெழுந்தா லன்ன படைநடுவே மலைதிரண்டெழுந்தாலன்ன உருவமுடைய மாதமிட்டிரன் வருந் தோற்றங் கண்ட தேவர், அம்ம! இவ் வுலகத்துப் போரில் வல்ல வீரர் யாவரால்தான் இவனை வெல்ல முடியும்? எங்கள் தலைவராகிய தனிப்பெருங் கடவுள் கருணைகூர்ந்து திரிசூலங்கொண்டு வடுகவேடந் தாங்கி வந்தமையானன்றோ யாமுய்ந்தோம்: வடுகக் கடவுள் தாங்கிய சூலாயுதமே இவ்வசுரனை வீழ்த்தவல்லதல்லது, மற்றுயாராலியலும்எனக் கூறி நின்றனர். அவுணப் படைகளோ மண்ணுலகினும் பரப்புடையன; மலையினும் பெருந் தோற்றமுடையன; விண்ணுலகத்தினுஞ் செல்லத்தக்கன; கடலையும் பருகத்தக்கன; எண்ணளவைக் கடந்தன; கீர்த்தியினாலே எட்டுத் திக்கையும் வெல்லுவன; ஆதிசேடனையும் அச்சுறுத்துவன; நமனுக்கும் நமனாயுள்ளன; நெருப்புப் பொறி பறக்கும் கண்களையுடையன; போருக்கு எழும் ஆவலாலே புயங்கள் பூரித்து மூவுலகும் எதிர்ப்பினும் அழிக்கு மாற்றலுடையனவாக ஆரவாரித்து வரக்கண்ட பூதப் படைகள் நடுங்கின. நந்தியெம்பெருமான், "பயப்படாதீர்கள்; தேவரைக் காத்து அசுரரை மடிக்க நம் வடுகநாதர் ஈண்டுளார்; எழுமின் போருக்கு" என்ற

லும், எழுந்தனர் வீரர்; எடுத்தனர் குந்தம், நேமி; அடித்தனர்; அறுத்தனர் அசுரர் குழாத்தை. எயிறுதிர்ந்தன; தலை கிழிந்தன; மூளை சிதறின; உரம் பிளந்தன; முதுகெலும் பொடிந்தன; கலங்கின அசுரர்சேனை, கண்ணுதற் படையோன் எண்ணரும் படையால். கண்டனர் அவுணர்; நெடுந்தடி, முசலம், நேமி, சூலம், குந்தம், பிண்டி, பாலம், வேல், நாஞ்சில் ஆதிய ஆயுதங் கைக்கொண்டனர்; எற்றினர் பூதப்படையை; பட்டன கணங்கள். சிரம்உருண்டன, தோள் அறுபட்டன, கால் இற்றன, மார்பு கிழிந்தன. மனவுறுதியும் இழந்தனர். சான்றாண்மை யுடையோராகலின், "சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி, துலையல்லார் கண்ணுங் கொளல்" என்ற அறத்தினை ஆண்டுங் காட்டுவான் பின்னிட்டனர். கணங்கள் பின்னிடக் கண்ட நந்தியங்கடவுள், அக்கணமே உயர்ந்ததோர் தேரிலேறித் தேவதுந்துபி முழங்க மண்மகள் களிகூரப் பூதப்படையோடும் போர்முனையிற் புகுந்தார். ஆரவாரத்தோடு புகுந்த நந்தியம்பெருமானைக் கண்ட மாதமிட்டிரன், "திங்கள் சூடிய கங்கைச் சடையனுக்கும் அஞ்சாத நம்மோடு இந் நந்தியோ பொரவந்தான்; நன்று! ஆராய்தலின்றி வந்த இந் நந்தியோடு பூதப்படைகளையும் இக்கணமே வீழ்த்துவேன்" என்று நமனும் நடுங்குமாறு வில்லை வளைத்துக் குணத்தொனி செய்து, சுடு கணைகளை ஆகாயம் மறையுமாறு தூர்த்தான். அக் கணைகளாலே பூதப் படைகளெல்லாம் அழிந்தன. நந்தியம்பெருமான், தேவர்களுளமகிழவும், அசுரர்களுளமழியவும் வில்லை வளைத்துக் கணைமாரி பொழிந்தார். அக்கணைகள் எழு கடலையும் வற்றச் செய்து ஊழிக்காலம் முடிவோ என்று கண்டோர் கருதுமாறு சென்று அவுணப் படைகளை அழித்துப் பிணக்குவியலாக்கி, வாசிகளை யறுத்துப் பொற்றேர்களையெல்லாம் சாம்பராக்கின.

தம் படைகள் ஒழிந்ததைக்கண்ட மாதமிட்டிரன் வெகுண்டு, தான் அரிய தவத்தினாற் பெற்ற இருட்கணை யொன்றை நந்தியம் பெருமான்மீது விடுத்தான். அப் படையானது உலகை யெல்லாங் குருடாக்கி மருளச் செய்து வருதலைக் கண்ட பூதப் படைகள் பேதுற்றன. நந்திதேவர் சூரியப்படை யொன்றை யேவி இருட் படையைத் துணித்தார். மாதமிட்டிரன் வெகுண்டு மாயப் படையையெடுத்து இருடிசந்தம் முதலிய மந்திரங்களை ஜெபித்து விடுத்

தான். அப் படையானது முன் னிறந்துபட்ட கும்பாண்டகன், தேவகண்டகன் முதலிய படைகளெல்லாம் உயிர்பெற் றெழுந்து படையேந்தி வருதல்போற் காட்டி நெருங்கியது. அதுகண்ட பூதப் படைகள் நந்தீசனை நோக்கி, "ஐயனே! முன் னிறந்தொழிந்த வீரரெல்லாம் உயிர்த்துப் படையேந்தி வருகின்றனர்; எம்மைக் காத்தருள்க!" என இரந்தனர். அவர்கள்படும் துன்பத்தைக் கண்ட நந்திதேவர் அஞ்சாதீரெனத் தேற்றி, அம் மாயப்படையைப் போக்கவல்ல ஞானப்படையை எடுத்துக் கண்ணுதற்கடவுளைத் தியானித்து விடுத்தனர். ஞானப்படை வெளிப்பட்ட வுடனேயே மாயப் படையின் செயல் மாயமாய்ப் போயிற்று. தன் நாமம் புகலும் அடியாரிடத்தும் மாயை அணுகாது அகலுமெனின், சிவபரம் பொருளை நேரே தரிசித்து அவன் கைலைமலையிற் றலைமைக்கொண்டு பூண்டு விளங்கும் நந்தியம்பெருமான் மாயையைப்பாற்றினா ரென்பது ஒரு வியப்போ? நிற்க: தவங்கிடந்து பெற்ற படை அவமாய்ப் போனது கண்ட மாதமிட்டிரன் உளம் பதைத்துப் பெருஞ்சின மூண்டு, தெய்வத்தன்மை பூண்டதும், வெகுளியின்றிப் பொறுமை யறியாததும், நெருப்பைக் கான்று செல்வதுமாகிய வேலொன்றை யெடுத்து நந்தியம்பெருமான்மீது விடுத்தான். அதுகண்ட நந்தியங்கடவுள் சத்திவேலாயுதத்தை யெடுத்து மந்திரித்து விடுத்தார்.

நந்தியம் பெருமான் விடுத்த சத்திவேலும் மாதமிட்டிரன் விடுத்த வேலும் ஒன்றோடொன்று சீறி யெழுந்து பொருதது. ஞாயிறுந் திங்களும் கலங்கித் திசைதடுமாறின. அவ்வேல்களிரண்டும் பெரிய மலையிடத்துச் செல்லும்; திக்குகளின் அப்பால் அகலும்; கடலின் நடுவே இயங்கும்; பாதலம் ஏழினும் படரும்; சொர்க்கத்தின்கண்ணே சுழலும்; மண்ணுலகத்தை யளக்கும்; எதிர்ந்தோரைப் பொடிபடுத்தும்; மலைகளைத் தகர்த்துவீசும்; அண்டகோளத்தை அழிக்கும். இன்னணம் ஒன்றற் கொன்று பின்னிடாது பெரும்போரியற்றி நந்தியங்கடவுளது சத்திவேலாயுதமானது அவ் வசுரனது வேலைப் பொடிபடுத்தி அம் மாதமிட்டிரனது மகுடத்தைத் தகர்த்து வீழ்த்தி அவனுடைய படையையும் நூறி, நீர்க்குளித்து ஐயன் கரத்தேயமர்ந்தது. தேவர்கள் மலர்மழை பொழிந்தார். மாதமிட்டிரன் நிலைகலங்கி மண்மேற் சாய்ந்தான்;

இந்நிலையில் இவனுயிர் வௌவுதல் அறனன்றென்று நந்தியங்கடவுள் மேல்விளைவை நோக்கி நின்றனர். மாதமிட்டிரன் தரையில் வீழ்ந்தது கண்ட அவுணப்படைகள் நடுக்குற்றுத் திசைதோறும் ஓடின.

இன்ன னாய இவனுயிர் வௌவுதல்
என்னு நீதியன் றென்னு மனத்தினன்
நன்னர் நந்தி யிருப்ப நடுக்குறீ இச்
சின்ன பின்னமுற் றோடினர் தீயரே.

---

## கூ. வயிரவக் கடவுள் சூலத்தினால் மாதமிட்டிரன் மணி மல்லன் ஆதியரைச் சம்மரித்தல்.

மாத மிட்டிரப் பேர்புனை வாகையான்
சாத லெய்தினன் போற்புவி சாய்ந்தனன்
ஓத மொத்த வுமாது படையொடும்
போதிர் போதிர் பொருக்கெனப் போதிரால்.

மாதமிட்டிரன் மூர்ச்சித்து மண்ணில் விழுந்தவுடன், தூரத்திலிருந்த மணி மல்லர்களிடத்தில் ஒற்றர்கள் ஓடிவந்து தாளில் வீழ்ந்து, 'வெற்றிமாலைபுனைந்த மாதமிட்டிரன் போர்முனையில் செத்தானை யொத்துப் புவியில் வீழ்ந்தனன். சேனைகளுள் தப்பிப் பிழைத்தவர் நாங்கள்மாத்திரமே. கடலைப்போன்ற பெரும்படைகளுடன் புறப்படுங்கள், புறப்படுங்கள்; விரைந்துசெல்லுங்கள்." என்றனர்.

அவ்வுரை கேட்ட மணிமல்லர் பொறிபறக்குங் கண்ணினராய், புகையெழு மூக்கினராய்க் கனன்று படைகள்யாவும் தம்மைச் சூழ்ந்துவரச் சென்றனர். படைகள் விண்ணுலகையும், மண்ணுலகையும் மறைத்தன. இந்திரன் நமக்கு யாது விளையுமோ வெனக் கலங்கும்படி தானைகள் போர்க்களத்தை யடைந்தன. மண்மேற் சாய்ந்து கிடந்த மாதமிட்டிரன் மூர்ச்சை தெளிந் தெழுந்தான். அதுகண்ட மணி மல்லர் அவனை நோக்கிப் "புவனங்களை யெல்லாம் வெற்றி கொண்ட போர்வீர! சிவன்மலைத்தலைக்காவல்பூண்டஓர் காளைக்கோவலியிழந்து அவமதிப்புற்றனை. நன்று! தேவராயினும், மற்றைத் திருமால் பிரமனாயினும், ஏனைய எவரேயாயினும் நம்முன் எதிர்ப்

பின் சாவரன்றித் தப்பிப்பிழைத்தலுமுண்டோ!" என்று தம் அசுரத்
தன்மைக் கேற்பக் கூறினர். அச்சொற்கள் தம்மனத்தைச் சுடுதலினா
லே கோபமூண்டவனாய் மாதமிட்டிரன் விரைந்து அருகே நின்ற
தேரிலேறினான். மணிமல்லர்களுந் தத்தம் தேரிலேறிப் பூதப்படை
களை வளைத்துத் தனுசுகளில் சரங்களைப்பூட்டி அண்டங்கள் நடுக்கு
றும்படி ஊழிக்காலத்து மேகம்போலச் சொரிந்தனர். பூதப்படை
கள் தலையிழந்தாரும் காற்றுணிந்தாரும் மார்பு பிளந்தாரும் கை
யிழந்தாருமாய் வீழ்ந்தனர். அவ் வுடல்கள் பிணமலையாய்க் குவிந்
தன. அவ்வுடலினின்று சொரியும் செந்நீர் அம்மலையினின்றும் வடி
யும் அருவி நீரை யொத்தது. பேய்களும் வெருவி ஓடும் வண்ணம்
தலையறுபட்ட உடல்கள் கூத்தாடின. அதுகண்ட தேவர்கள் நிலை
கலங்கி, இனி வைரவக் கடவுளையன்றி வேறுயாரிடத்து முறையிடு
வோமென்று தம்முட் கூறிக்கொண்டு ஓடி வடுகநாதன் திருவடிகளில்
வீழ்ந்து எழுந்து, "ஐய! அவுணர்கள் நம்பூதப்படையை முற்றும்
வீழ்த்தினர்; நந்திதேவரையன்றி வேறு யாருமில்லை; விரைவில் அவ்
வசுரரைக் கொன்று, பூதப்படையினை உயிர்ப்பிக்கத் திருவுளம்பற்ற
வேண்டும்" என்றிரந்தனர். அது கேட்ட வைரவக் கடவுள் விசு
வரூபந்தாங்கி வீரநகை புரிந்து தமது திருவாயாற் பேரொலி செய்
தார். அவ் வொலி அவுணப் படைகளனைத்தையும்விழுங்கியது. பின்
னர், தமது திருக்கரத்துள்ள முத்தலை வேலினை நோக்கி, "பாத
கராகிய அவுணர் மூவரையும் உனது கூரிய நுனியால் மார்பிற்
குத்தி மீண்டுக் கொணர்க!" என விடுத்தார். அவ் வாணையை
யேற்றுச் சூலாயுதமானது தேவர்களும் பார்த்தற் கியலாது கண்
களை இமைக்கும்படி. பெருநெருப்பைக் கான்றுசென்று அவ்வவுணர்
மூவருடலையும் தன் நுதியாலே குத்திக் கோத்துக்கொணர்ந்து
வைரவக் கடவுளின் திருமுன்பு சேர்த்து வணங்கிற்று. அதுகண்ட
வடுகநாதர், விழிமலர் பரப்பி இவற்றைத் தெற்கேயிடுக என உணர்
த்தினர். சூலாயுதம் அங்ஙனமே செய்து கடலிற் குளித்து வடுகக்
கடவுளின் கரத் தமர்ந்தது. அங்ஙனம் எறியப்பட்ட அவுணருடலம்
கொடுமுடிகளாய்க் குலவின.

பின்னர், முழுமுதற்கடவுளாகியவைரவக்கடவுள் வேதம்வழங்
கும் தமது திருவாக்கினால்,'மாண்ட பூதப் படைகளெல்லாம் மீண்டு
யிர்த்து வருக!" என்றருளினர். அக்கணமே பூதப்படைகள் யாவும்
உறங்கினர் விழித்தெழுந்தாற்போன்று எழுந்து ஆரவாரித்தன.

தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். மேனகை முதலிய தெய்வமகளிர் நடித்தனர். மோன நிலே யடைந்திருந்த முத்தர்கள் வாழ்த்தினர். ஆனகம், துந்துபி முதலிய இயங்கள் ஆர்த்தன. வைரவக் கடவுளின் வீரகர்ச்சனையால் அவுணப் படைகளும், சூலத்தால் அவுணவீரர்களும் அழிந்த செய்தியைச் சூரபத்மனுக்குச் சொல்ல ஒருவருமில்லா தொழிந்தனர். அவுணப் படைகளெல்லாம் இவ்வாறு ஒழிந்தபின்னர், நந்தியம்பெருமான் போர்க்களம் விட்டு நீங்கிப் பூதகணங்களோடும் கற்பகவிநாயகக்கடவுளது திருவடிகளே வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்று, வைரவத் திருக்கோலந் தாங்கிய இறைவனே வணங்கி வாழ்த்தினர்.

திருமால், பிரமன், இந்திராதி தேவர்களெல்லாம் உவகைக் கடலில் மூழ்கினவர்களாய் உள்ளம் பூரித்துக் கண்களில் ஆனந்த நீர் துளிப்பக் கரைந்துகரைந்துருகி மெய்சிலிர்த்துச் சிரத்திற் கரங் குவித்துத் தங்கட்கு உய்தியளித்த வடுகநாதனைப் பின்வருமாறு வாழ்த்தினர்:—

மாறியல் வினைபு ரிந்து வைகலு மெம்ம னோரைச்
சீறிய கொடிய தீய சிதடரா மவுணர் யாரும்
நூறிய முழக்கி யேற்ற நோன்பெருங் களத்தொ ருங்கு
பாறிய முனிந்தாய் போன்ற பரமகா ருணியா போற்றி!

நாயினு மிழிந்தோ மாகி நண்ணிய எமக்கி ரங்கித்
தீயினு மால காலத் திரளினும் வெய்ய தெவ்வை
வீயினுங் குருதி கக்க வல்விரைந் தடர்த்துப் பெற்ற
தாயினு மினிமை மிக்க தயாநிதி யெந்தாய் போற்றி!

நற்றுளி மழைமு கிற்கு நானிலம் பிரதி யாற்றில்
சிற்றறி வுடையேம் நிற்குச் செய்வதோர் கைம்மா றுண்டால்
குற்றமுங் குணமாக் கொண்டு கோதாட்டி அன்பர்க் காக்கும்
கொற்றவ வடுக நாத குரூஉச்சடைக் குமர போற்றி!

எனத் துதித்த திருமால் முதலிய தேவர்களுக்கு வைரவக்கடவுள், 'தேவர்காள்! முதலும் முடிவு மில்லா முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானின் நுதற்கண்களினின்றும் ஆறுமுகமும் பன்னிரு கரங்களுங் கொண்டு இன்னுஞ் சின்னாளிற் குமரவேள் திருவவதரித்து, சூரபத்மனுதியரை யழித்து உங்களுக்கு நன்மை புரிந்து உலகை யுய்விப்பர். அதுவரை நீவிர் நன்னைச் சார்ந்தவர் யாவரே

யாயினும், எத்தகைய சிரம முடையரே யாயினும், அவரது சிரமத்தைப் போக்கும் காரணத்தால் "இளையாற்றங்குடி" என வழங்கும் பெரிய வளப்பம் வாய்ந்த பழமையாகிய வனத்துள்ளே நித்திய கல்யாணி சமேத கைலாசநாதர் வேண்டுவார் வேண்டியாங்கு அருள் வான் அமர்ந்துள்ளதும், இத்தலத்தின் வாயுத் திக்கில் அரையோசனைக் கப்பாலுள்ளதுமான இளையாற்றங்குடியிற் சென்று நும் இளைப்பு ஆறுமின்!" என்றருளினர். தேவர்கள், எம்பெருமானே! திருவுளம் பற்றியாங்குச் செய்கின்றோம். தேவரீர் என்ஞான்றும் இத் தலத்திலிருந்து நின் திருவடியடைந்தோர் பலவகை நிதியங்களையும், பூரண ஆயுளையும், போக போக்கியங்களையும், நல்ல கல்வி கேள்விகளையும் அடைந்து, பிணியி னீங்கி வாழும்படி அருள்புரிய வேண்டும். அழகிய சூலப் படையைக்கொண்டு மகிழ்வுடன் என்றும் இத் தலத்தி லுறைந்தருளவும், மேகமளாவிய சோலைகள் சூழ்ந்த இவ்வூர் வைரவன்கோவில் என்னும்பெயர்பெற்று விளங்கவும்வேண்டும்" எனப்பிரார்த்தினர். வைரவக்கடவுள் அவ்வண்ணமே யாகுக! என அவர்களுக்கு விடை கொடுத்தருளி மலையையொத்த பொன்மயமான திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருந்தார்.

திருநந்திதேவர் திருக்கைலையில் தன ததிகாரத்தி லமர்ந்தனர். தேவர்கள் ஆகமவிதிப்படி அங்குத் தீர்த்தத்தில் மூழ்கித் திருநீறணிந்து சாதனம் புனைந்து ஐந்தெழுத் தோதி கற்பக விநாயகக்கடவுளைத் தொழுதனர். கரத்தாலே சிரத்திற் குட்டி, கைகொடு கன்னம் பற்றித் தாழ்ந்தெழுந்து வணங்கிய பிறகு அருச்சிக்கத் தொடங்கினர். முதலில் தைலத்தோய்த்துத் திருமஞ்சனமாட்டிப் பஞ்சாமிர்தம் பால் தயிர் இளநீர் பழச்சாறு பனிநீர்களை அபிஷேகித்துக் கலசநீராட்டிப் பரிவட்டங்கொண்டு நீருலர்த்திப் பட்டாடை சாத்தி நீறு சந்தனம் புழுகு அணிந்து, மோதகம், தயிரன்னம், எள்ளோதனம், நாளிகேரம், முப்பழம், கரும்பு, தாம்பூலம் அருத்தித் தூப தீபங் காட்டிப் பொன்மலர்கொண் டருச்சித்து,

வன்னமும் பதமு மூல மந்திரத் தானு மான
பின்னமில் குடிலை யின்கட் பேரொளிப் பிழம்பாய்த் தோன்று
முன்னவ முன்னத் தாடு முன்னினை முன்னு வார்கட்
கென்னகா ரியமு முற்ற இன்னருள் புரிவாய் போற்றி!

தேவியைப் பாகம் வைத்த சிவனுனை நினையா னூர்ந்த
கூவிர மணித்த சும்புக் கூவிர தத்தின் கோப்பு
நீவிய பார வச்சு நெறுநெறு முறியச் செய்து
கோவியன் முதன்மை தேற்றுங் குரிசிலே போற்றி! போற்றி!

உன்றிரு மேனி தன்னை யுணர்விலாப் பிள்ளைத் திங்க
ளன்றிகழ் பெற்றி நாடி யனையற்குப் புலமை நல்கி
நின்றியா மிரப்ப வந்த நீள்பழி சிங்க பூர்வத்
தொன்றிய சதுர்த்தித் தாக வுறுத்தரு ளொருவ போற்றி!

நீரத நிரைமி லைந்த நிமிர்சடை நிமல மூர்த்தி
பூரத புராணன் மேன்மை புலப்படுப் பஃதென் றெண்ணிச்
சீரத முருத கோட்டாற் செம்பொன்மால் வரைய கத்துப்
பாரத கதையைத் தீட்டும் பண்ணவ போற்றி! போற்றி!

சித்தியே புத்தி யென்னச் செப்பிய வருமி ரண்டு
சத்திக ணீபெற் றுங்குத் தம்பியும் பெறுதல் வேண்டி
யத்தியின் குமரி யோடு மள்ளெழில் வள்ளி மானை
முத்திற மதமா வாகி முயக்குவா னுற்றாய் போற்றி!

என்று இவ்வாறு துதித்துநின்ற இமையவரை நோக்கிப் "பண்ணவர்காள்! நும்பராவல் பழத்தினும் தேனினும் பருகத்தக்க இனிமையாய் எம்மை மகிழ்வித்தது. இனி, நமக் கிளையராய்த் தோன்றும் குமரவேளினால் நும் துயரம் நீங்கும். இடையூறென்பது ஒரு சிறிதுமின்றி வாழ்வீர்." என அருளினர். தேவர்களும் இடைவிடாமல் கற்பகமூர்த்தியை மனத்தி லுன்னினராய், வைரவக்கடவுளுறையும் திருக்கோவிலின்கட்சென்று முத்திபெற்றோரைப் போன்று மகிழ்ந்து வதிந்தனர்.

இன்னன வபய வாய்மை இயம்பினன் விடுப்ப விண்ணோர்
அன்னவ னம்பு யத்தா ளகத்திடை யிடைவி டாராய்த்
தென்னமர் சோலை மாலை செறிவயி ரவன்கோ யிற்கட்
பின்னர்வந் திருந்தார் முத்திப் பேற்றின ரெனக்க ளித்தே,

---

## பேறு பெற்றோர் வரலாறு.

வடிவுடை நாய கிக்கும் வளரொளி நாத னுக்கும்
கடிதினிற் பூசை யாற்றக் கருதின ரிந்தி ராணி
மிடியினை யிடைக்க ளிக்கும் வீங்கிளங் கொங்கை புல்லி
முடிவிலா இன்பந் துய்ப்போன் முதலியோ ரிரைத்தெ ழுந்தார்.

வடிவுடை நாயகி சமேத வளரொளி நாதரைப் பூசிக்கக் கருதிய இந்திராதி தேவர்கள், வயிரவக்கடவுள் திருக்கரத்தில் விளங்குஞ் சூலத்தினுலகழ்ந்த வைரவதீர்த்தம் என்னுஞ் சிவதீர்த்தத்தில் மூழ்கி, புண்ணிய வெண்ணீறு திரிபுண்டரமாகத் தரித்து, உருத்திராக்க மாலையணிந்து, ஐந்தெழுத்தைச் சிந்தை செய்து, வானளாவிய சோலைகள் சூழ்ந்த வளரொளிநாதர் திருக்கோயிலின் முன்னர் எட்டங்கங்களும் நிலமிசைப் பொருந்தப் பணிந்தெழுந்து, திருக்கோயிலை மும்முறை வலம்வந்து வணங்கி, வாசனைதி திரவியங்களால் திருமஞ்சனமாட்டிப் பட்டாடைசாத்திச் செஞ்சாந்தந் திமிர்ந்து, ஒளிபரப்புகின்ற நவமணிக ளிழைத்த திருவாபரணங்களால் நிறைய அலங்கரித்து, அன்றலர்ந்த நாநாவித மலர்மாலைகள்சூட்டி, சித்திரான்னங்களும் தித்திக்கும் பலகாரவகைகளும் மதுவர்க்கங்களும் பழவகைகளும் பரப்பி, பக்தியுடன் மந்திரபூர்வகமாக நிவேதித்துத் தூபதீப ஆராதனைகள் செய்து, நறுமலர்களால் அருச்சித்து, ஆனந்தக் கண்ணீர்பெருக —நாத்தழுதழுப்ப—வாயார வழுத்தி, அளவிடற்கரிய கருணையங்கடலாகிய அம்மையப்பரின் புகழைப் பராவிப் போற்றி வைரவக் கடவுளை வணங்கினர். தேவதேவன் திருவாய்மலர்ந்து, "உங்கள் துதியை மகிழ்ந்தனம்; இன்னணம் துதிக்கின்றவர்கள் வேண்டிய வேண்டியாங் கருள்வோம்." என்று விடைதரக் கொண்டு, கைலாயநாதர் நித்தியகல்யாணியுடனுறையும் இளையாற்றங்குடியினிற் சென்றிருந்தனர்.

புண்ணிய மூர்த்தியைப் பூசித்த புண்ணியப்பேற்றினால், கொன்றைப் பூமாலையை யணித்த கோமான் மோனத்தினீங்கித் தனது நுதல் விழிகளினின்றும் ஆறுதீப்பொறிகளை யுதவி அப்பொறிகளைக் கங்கையில் விடுப்ப அவைகள் சரவணத் தடத்தையடைந்து ஆறுமுகமும் பன்னிரு தோள்களுமாக முருகவேள் திருவவதரித்து, வீரவாகுதேவராதிய தம்பியர் இலக்கத்தொன்பது பேர்களுடன் பூதப்படைகளும் படைவீரரும் தொடர்ந்துவர, இறைவரருளிய சத்திவேற் கரத்தராய்ச் சூரனுதியரை வேரறத்தடிந்து, தேவர் சிறைவிடுத்து, திருச்செந்தின் மாநகர்வந்து திருப்பரங்குன்றத்திற் கெழுந்தருளி தெய்வயானையம்மையை மணந்து, இந்திரனை விண்குடியேற்றி முடிசூட்ட, இந்திரன் தேவர்கள்போற்ற இனிது வாழ்ந்திருந்தான்.

பின்னும், ததீசி முனிவர் சிறுவிதியாகிய தக்கன்சொற்ற சிவநிந்தைகளைக் கேட்ட பாவந்தீரவும், சந்திரன் குருபன்னியாகிய தாரையைப் புணர்ந்த பாவந்தீரவும், இந்திரன் பிரமகத்தி நீங்கவும், சுக்கிரன் ஈவது விலக்கியதாற் குருடாகிய பாவந்தீர்ந்து கண் பெறவும், அருணூலாகிய ஆகம முறையே வழிபாடாற்றிப் பேறு பெற்றனர்.

காவிரிப்பூம் பட்டினத்தில் மன்னர்பின்னராகிய மாதன வைசியகுலத்தில் உதித்த கிரிகரன் என்பார் வந்தணைந்து, முற்பவமுணர்ந்து அப்பவந் தொலைத்துத் திருவருளாற் குருவருளுங் கைகூட, மாதனவணிகர்களின் வரலாறும், வாழ்க்கை நலனும், அறநெறியொழுக்கமும், சிவநெறித் திறனும், சிவாசாரியாரிடத்துத் திருவைந்தெழுத் தோர்ந்து சிவபுண்ணியசீலர்களாய் வாழுஞ்சீர்மையும், திரிகால நிலையுந் தெளிந்து, மெய்ந்நெறியாகிய சைவசித்தாந்தங் கைக்கொண்டு, சிவதிருப்பணிகளையே தங்கள் குலதருமமாகக் கொண்டு, "கோயில்விளங்கக் குடிவிளங்கும்" என்னும் முதுமொழிக்கிணங்கச் சீருஞ்செல்வமும் பேரும் புகழும்பெற்று, பாண்டிமண்டலத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்களையொப்ப விளங்கும் தொண்ணூற்றாறு ஊர்களில்வாழும் தனவணிகப்பெருமக்களுக்கு உரிய இளையாற்றங்குடி, மாற்றூர், வைரவன் கோவில், இருப்பைக்குடி, நேமம், சூரக்குடி, வேலங்குடி, பிள்ளையார்பட்டி, இரணியூர் ஆகிய ஒன்பது நகரக்கோயில்களுள் ஒன்றாகிய இத்திருத்தலத்தில்,

> "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!"

என்றதற் கிலக்கியமாகச் சிவயோகியார் தெரிசனந் தந்து அருளியவாறே, வடிவுடையம்மை சமேத வளரொளிநாதரையும் வைரவக்கடவுளையும் மூத்த பிள்ளையார் முருகவேளாதிய மூர்த்திகளையும், ஆதிசைவசிவாசாரியர்களால் அருச்சித்தேத்தி, அப் புண்ணியப் பேற்றினால் நேமநகரிற் பலகாலம்வதிந்து, சித்தாந்தத்திறனை யோர்ந்து சிந்தித்துத் தெளிந்து மெய்ஞ்ஞானநிட்டையிற் றிளைத்து, அருட்பெருங் கடலாகிய இறைவர் திருத்தாள்களிற்சேர்ந்து, பெறுதற்கரிய பேரின்பப்பெருவாழ்வு பெற்றனர்.

என்று வேதவியாசரின் மாணாக்கராகிய சூதமகா முனிவரிடத்து நைமிசாரணிய வாசிகள், மலைபோலுயர்ந்த மாட்மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கொண்டு சோலைகள் சூழச் சுவர்க்க லோகத்துக்கும் அழகினைத்தரும் வைரவமாநகரத்தின் மான்மியத்தைக் கேட்டு உளங்குளிர்ந்து, நிறைந்த பேரின்பத்துடன் அகமுகமலர்ந்து மகிழ்ந்திருந்தனர். வளரொளிநாதர் வடிவுடையம்மை மார்த்தாண்டவைரவர் மூத்தபிள்ளையார் முரு

கவேள் ஆதிய மூர்த்திகள் உறைகின்ற இத்திருத்தலச் சிறப்பை இனிய தமிழில் அன்பர்சூழாத்திடை சொல்லும்படிவாய்த்த புண்ணியப் பேற்றை யெண்ணி இன்புறுகின்றேன்.

வைரவன் கோவிலும், அறத்தாற் சிறந்து புகழ்நிரம்பிய பெருமை பெறும் மாதனவணிகர்குலமும், அன்பர் அடியவர்களும், வைதிகசைவபரம் பரையும், இவ்வுயரிய மான்மியத்தைப் பத்திசிரத்தையுடன் படிப்பவர்களும் கேட்பவர்களும், திருவருளாற் சிறந்தோங்கி நெடிது வாழ்க!

இத்தலமான்மியத்தின் விரிவுமுழுதும் புராணத்திற் கண்டு தெளிக.

---

## பயன்

வயிரவன் கோயிற் றலபுரா ணத்தை
மல்கிய விருப்பொடு கேட்போ
ரயிரவண் மண்டு கரைபொரு தரங்கத்
தாழிசூ ழவனிமே ணாளுண்
டுயிரவ ராகிப் பிணியொரீஇச் செல்வத்
தோங்குபு நன்மகார்ப் பெற்றுக்
கயிரவ மலர்வாய்க் கௌரியோர் பாகன்
கழனிழன் முடிவினிற் கலப்பார்.

---

## வாழ்த்து.

அந்தணர் வானத் துள்ளா ரானினஞ் செழித்து வாழ்க!
கொந்தணி முகில்வ ழாது குளிர்மழை பொழிக கோமான்
செந்தனிக் கோல்ப டர்ந்து திசையெலாங் காக்க வையஞ்
சந்தத மார்க வின்பஞ் சைவசித் தாந்தம் வெல்க.

வாழி வைரவன் கோயில் வளர்புகழ்
வாழி வண்மை வணிகர் பெருங்குலம்
வாழி மாதுமை மன்ன னடியவர்
வாழி வைதிக சைவ மரபெலாம்.

---

சிவமயம்.

# வைரவன்கோவில் ஸ்தலமான்மியம்.

## உள்ளுறை.


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| க. | கடவுளர் துதிகள் | 1 |
| உ. | நாட்டுவளம் | 2 |
| ௩. | நகரவளம் | ,, |
| ௪. | புராண வரலாறு | 3 |
| ௫. | தலவிசேடம் | 4 |
| ௬. | தீர்த்தவிசேடம் | 5 |
| ௭. | மூர்த்தி விசேடம் | ,, |
| ௮. | தேவர் சரண்புகல் | 7 |
| ௯. | வைரவர் திருவவதாரம் | 9 |
| க௦. | சாரதவீரர்களுக்கும் தானவவீரர்களுக்கும் யுத்தம் (க) | 12 |
| கக. | திருநந்தி தேவருக்கும் தேவகண்டகனுக்கும் யுத்தம் (உ) | 13 |
| கஉ. | விநாயகக் கடவுளுக்கும் கும்பாண்டகனுக்கும் யுத்தம் (௩) | 15 |
| க௩. | விநாயகப் பெருமானுக்கும் வக்கிர தமிட்டிரனுக்கும் யுத்தம் (௪) | 21 |
| க௪. | திருநந்திதேவருக்கும் மாதமிட்டிரனுக்கும் யுத்தம்(௫) | 27 |
| க௫. | வயிரவக் கடவுள் சூலத்தினுல் மாதமிட்டிரன், மணி, மல்லன் ஆதியரைச் சம்மரித்தல் (௬) | 30 |
| க௬. | பேறு பெற்றோர் வரலாறு. | 35 |